# சோதிடமலர்

# SOTHIDA MALAR





உள்ளே...

இம்மாதம் உங்களுக்கு எப்படி?
மனிதரில் பன்னிரு வகையினர்
சைவ விரதங்களும் விழாக்களும்
அதிஷ்ட எண்ஞானம்

விபவ ௵ வைகாசி ௴ (14-5-88—14-6-88) ரூபா 4·00

உ

# சோதிட மலர்

SOTHIDA MALAR

மலர் 11 ❋ இதழ் 2

ஆசிரியர்:
பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா
(சம்ஸ்கிருத பண்டிதர்)

❋

விபவ ௵ வைகாசி ௴
( 14 - 5 - 88 )

ஶாரதிந்து ஸகாஶ ஷடானனயா
ஸரஸீருஹ சாரு விலோசனயா।
நிருபாதிகயா நிஜவபுஷா தயா
வஸிவாஸ்ய தாரக ஶாரகரோடி॥

★ ★ ★

ஆற்றல் அடல்விடையேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப்புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னனுடனுற்ற தீப்பிணி யாயினதீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும்வல்லவர் நல்லவர்தாமே.

★ ★ ★

## கலைஞர் கடமை

தருமமும் சத்தியமுமே வாழ்க்கையின் குறிக்கோள்களாக இருக்கும் நிலையை ஸ்தாபிக்க முடிகிறது. ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவதன் மூலமும் பாரதம் போன்ற இதிகாசங்களைக் கேட்பதன் மூலமும் அகமும் புறமுமுள்ள குறைபாடுகளை நீக்கித் தூய்மை பெறவேண்டும். பாமர மக்களை பரவசப் படுத்தும் நாட்டுக் கலைகளான நாடகம், கூத்து இவைகளையும், வழிவழியான பாட்டுக் கதைகள் மூலம், தர்மம், பக்தி ஒழுக்கம் முதலிய நல்வாழ்க்கை முறைகளைப் பிரபலயப் படுத்தி தர்மம், சத்தியத்தில் வேரூன்றியவர்களாக மக்களை ஆக்கவேண்டும். மக்கள் நற்பண்பினராக வாழ்வதற்குத் துணைபுரிய வேண்டும் எனும் பொறுப்பு எல்லாவகைப் புலவர்களுக்கும் கலைஞர்களுக்கும் முக்கியஸ்தானத்தை வகிக்கின்றது.

## வைகாசி விசாகம்

சரவணப் பொய்கையிலே இறைவனின் நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய ஆறு பொறிகளும் அழகிய தாமரைப் பூக்களிலே ஆறு திருக்குழந்தைகளாகத் தோன்றின. சூரபத்மாசுரனின் துன்பங்களைத் தாங்க முடியாத தேவர்களின் கஷ்டங்களை நீக்கத் திருவுளங் கொண்ட இறைவனின் நெற்றிக் கண்ணினின்றும் தோன்றியதான இவ்வாறு குழந்தைகளையும் காத்தற் கடவுளாகிய விஷ்ணு மூர்த்தியின் திருவுளப்படி ஆறு கார்த்திகைப் பெண்களும் பாலூட்டி வளர்த்தனர். பின் இவ்வாறு குழந்தைகளும் ஆறு முகங்களுடைய ஆறுமுகப் பெருமானாக அவதரித்ததாக கந்தபுராணம் கூறுகிறது. சரவணப் பொய்கையில் தோன்றிய குழந்தைகளும் ஆறுமுகப்பெருமானாக அவதரித்த தினமே வைகாசி மாத விசாக நக்ஷத்திர புண்ணிய தினமாகும்.

அருவமும் உருவுமாகி அனாதியாய், பலவாய் ஒன்றாய், பிரம்மமாய், சோதியாய் உலகமுய்யத் தோன்றிய இறைவன் ஆறுமுகப்பிரானாகி இக் கலிகாலக் கஷ்டங்களை நீக்கத் திருவுளங் கொண்டுள்ளான் போலும். இறைவனே குழந்தையாகத் தோன்றிய இப்புண்ணிய தினமான விசாக நன்னாளில் இப்போது நிலைகொண்டுள்ள ராக்ஷச குணமெல்லாம் நீங்கி தேவகுணம் செறிந்து அரச காவலர்கள் எம்மையெல்லாம் காப்பாற்ற வேண்டும் என மக்கள் யாபேரும் ஆறுமுகப் பெருமானிடம் பிரார்த்தனை செய்வதே கஷ்ட நிவாரணியாகும்.

# விபவ வருஷ வைகாசி மாத கிரக நிரயனஸ்புடங்கள்

(இலங்கை நேரப்படி காலை 5-30 மணிக்கு Nirayana Longitudes of Planets for 5-30 A. M. C. S. T.)

ராகுஸ்புடத்துடன் 6 ராசி கூட்ட கேதுஸ்புடம் வரும் (அயனும்சம் 23 பா 4 கலை 09 விகலை)

| தேதி மே | தேதி வை | நாக்ஷத்ர நேர பகல் 12-00 (ம நி. செ) | சூரியன் ☉ (ரா பா க) | சந்திரன் ☽ (ரா பா க) | செவ்வாய் ♂ (ரா பா க) | புதன் ☿ (ரா பா க) | குரு ♃ (ரா பா க) | சுக்கிரன் ♀ (ரா பா க) | சனி ♄ (ரா பா க) | ராகு ☊ (ரா பா க) | யுரேனஸ் ♅ (ரா பா க) | நெப்டி ♆ (ரா பா க) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | 1 | 3 28 53 | 0 29 43 | 0 4 55 | 10 0 56 | 1 20 55 | 0 21 37 | 2 5 24 | 8 8 0 | 10 26 22 | 8 6 44 | 8 16 13 |
| 15 | 2 | 3 32 49 | 1 0 41 | 0 18 52 | 1 35 | 22 12 | 21 51 | 5 41 | 7 57 | 26 19 | 6 42 | 16 12 |
| 16 | 3 | 3 36 46 | 1 39 | 1 2 37 | 2 14 | 23 25 | 22 5 | 5 57 | 7 54 | 26 16 | 6 41 | 16 11 |
| 17 | 4 | 3 40 42 | 2 37 | 1 16 5 | 2 53 | 24 33 | 22 19 | 6 10 | 7 51 | 26 13 | 6 39 | 16 10 |
| 18 | 5 | 3 44 39 | 3 35 | 1 29 15 | 3 32 | 25 38 | 22 34 | 6 22 | 7 48 | 26 9 | 6 37 | 16 9 |
| 19 | 6 | 3 48 35 | 4 32 | 2 12 6 | 4 10 | 26 39 | 22 48 | 6 31 | 7 45 | 26 6 | 6 35 | 16 8 |
| 20 | 7 | 3 52 32 | 5 30 | 2 24 38 | 4 49 | 27 35 | 23 2 | 6 38 | 7 41 | 26 3 | 6 33 | 16 7 |
| 21 | 8 | 3 56 28 | 6 28 | 3 6 53 | 5 28 | 28 28 | 23 16 | 6 43 | 7 38 | 26 0 | 6 31 | 16 6 |
| 22 | 9 | 4 0 25 | 7 26 | 3 18 54 | 6 6 | 29 16 | 23 30 | 6 45 | 7 35 | 25 58 | 6 29 | 16 5 |
| 23 | 10 | 4 4 22 | 8 23 | 4 0 47 | 6 44 | 1 29 59 | 23 44 | 6 45 | 7 31 | 25 55 | 6 27 | 16 4 |
| 24 | 11 | 4 8 18 | 9 21 | 4 12 36 | 7 23 | 2 0 38 | 23 58 | 6 43 | 7 27 | 25 52 | 6 25 | 16 2 |
| 25 | 12 | 4 12 15 | 10 19 | 4 24 26 | 8 1 | 1 13 | 24 12 | 6 38 | 7 24 | 25 49 | 6 23 | 16 1 |
| 26 | 13 | 4 16 11 | 11 16 | 5 6 24 | 8 39 | 1 43 | 24 26 | 6 31 | 7 20 | 25 46 | 6 21 | 16 0 |
| 27 | 14 | 4 20 8 | 12 14 | 5 18 33 | 9 17 | 2 8 | 24 40 | 6 22 | 7 16 | 25 43 | 6 18 | 15 59 |
| 28 | 15 | 4 24 4 | 13 11 | 6 0 59 | 9 54 | 2 29 | 24 54 | 6 10 | 7 13 | 25 40 | 6 16 | 15 57 |
| 29 | 16 | 4 28 1 | 14 9 | 6 13 44 | 10 32 | 2 45 | 25 8 | 5 55 | 7 9 | 25 36 | 6 14 | 15 56 |
| 30 | 17 | 4 31 57 | 15 6 | 6 26 50 | 11 10 | 2 57 | 25 22 | 5 31 | 7 5 | 25 32 | 6 12 | 15 55 |
| 31 | 18 | 4 35 54 | 1 16 4 | 7 10 17 | 10 11 47 | 2 3 3 | 0 25 36 | 2 5 20 | 8 7 1 | 10 25 29 | 8 6 10 | 8 15 53 |
| ஜூன் 1988 1 | 19 | 4 39 51 | 1 17 1 | 7 24 3 | 10 12 25 | 2 3 5 | 0 25 49 | 2 4 58 | 8 6 57 | 10 25 26 | 8 6 7 | 8 15 52 |
| 2 | 20 | 4 43 47 | 17 59 | 8 8 5 | 13 2 | 3 3 | 26 3 | 4 35 | 6 53 | 25 23 | 6 5 | 15 51 |
| 3 | 21 | 4 47 44 | 18 56 | 8 22 17 | 13 39 | 2 56 | 26 17 | 4 9 | 6 49 | 25 20 | 6 3 | 15 50 |
| 4 | 22 | 4 51 40 | 19 54 | 9 6 34 | 14 16 | 2 45 | 26 31 | 3 41 | 6 45 | 25 16 | 6 0 | 15 48 |
| 5 | 23 | 4 55 37 | 20 51 | 9 20 52 | 14 53 | 2 29 | 26 44 | 3 12 | 6 40 | 25 13 | 5 58 | 15 47 |
| 6 | 24 | 4 59 33 | 21 49 | 10 5 6 | 15 30 | 2 10 | 26 58 | 2 40 | 6 36 | 25 10 | 5 56 | 15 45 |
| 7 | 25 | 5 3 30 | 22 46 | 10 19 17 | 16 7 | 1 48 | 27 11 | 2 8 | 6 32 | 25 6 | 5 53 | 15 44 |
| 8 | 26 | 5 7 26 | 23 43 | 11 3 21 | 16 44 | 1 23 | 27 25 | 1 33 | 6 28 | 25 3 | 5 51 | 15 42 |
| 9 | 27 | 5 11 23 | 24 41 | 11 17 18 | 17 20 | 0 54 | 27 38 | 0 58 | 6 24 | 25 0 | 5 49 | 15 41 |
| 10 | 28 | 5 15 20 | 25 38 | 0 1 8 | 17 56 | 2 0 24 | 27 52 | 2 0 22 | 6 19 | 24 57 | 5 46 | 15 39 |
| 11 | 29 | 5 19 16 | 26 36 | 0 14 49 | 18 32 | 1 29 52 | 28 5 | 1 29 45 | 6 15 | 24 54 | 5 44 | 15 38 |
| 12 | 30 | 5 23 13 | 27 33 | 0 28 21 | 19 8 | 29 19 | 28 19 | 29 8 | 6 11 | 24 50 | 5 41 | 15 36 |
| 13 | 31 | 5 27 9 | 28 30 | 1 11 42 | 19 44 | 28 45 | 28 32 | 28 30 | 6 6 | 24 47 | 5 39 | 15 35 |
| 14 | 32 | 5 31 6 | 1 29 28 | 1 24 50 | 10 20 20 | 1 28 12 | 0 28 45 | 1 27 53 | 8 6 2 | 10 24 43 | 8 5 37 | 8 15 33 |

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுகளை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம்; தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விலாசப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது;

## (வைகாசி மாதம் 1-ந் தேதி முதல் 32-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 5 மணி 53 நிமிஷம்)

| வாரம் | 5...53<br>6...53 | 6...53<br>7...53 | 7...53<br>8...53 | 8...53<br>9...53 | 9...53<br>10...53 | 10...53<br>11...53 | 11...53<br>12...53 | 12...53<br>1...53 | 1...53<br>2...53 | 2...53<br>3...53 | 3.. 53<br>4...53 | 4... 53<br>5.. 53 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பகல்** | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| **இரவு** | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்;

# நாள் சுபமா?

வை 1 சனி (14-5-88) திரயோதசி காலை 6 58வ. சதுர்த்தசி பி.இ. 5-10 வரை, அசுவினி மாலை 7-56 வரை, சித்தம், முக்கிய கருமங்கள் செய்யலாம். ராகு 8-53—10-26

வை 2 ஞாயி (15-5-88) அமாவாசை பி இ. 3 41 வரை, பரணி-மரணம் மாலை 7-04 வரை, அமாவாசை விரதம், அசுபதினம். ராகு 4-23—5-56

வை 3 திங் (16-5-88) பிரதமை பி.இ. 2-39வரை, கார்த்திகை-மரணம் மாலை 6-36 வரை, கார்த்திகை விரதம், சுபதினமன்று. ராகு 7-23—8-56

வை 4 செவ் (17-5-88) துவிதியை பி.இ. 2-10வ. ரோகிணி மாலை 6-38 வரை. அமிர்தசித்தம், வயற்செய்கைக்கு நன்று. ராகு 3-53—5-26

வை 5 புத (18-5-88) திரிதியை பி.இ. 2-19வரை, மிருகசிரிடம் மாலை 7-16 வரை, சித்தம், சுபகருமங்கட்கு உகந்ததினம். ராகு 11-53—1-26

வை 6 வியா (19-5-88) சதுர்த்தி பி.இ. 3-08வரை, திருவாதிரை-மரணம் இரவு 8-34 வரை, சதுர்த்தி விரதம், அசுபதினம். ராகு 1-23—2-56

வை 7 வெ (20-5-88) பஞ்சமி பி. இ. 4-37 வரை, புனர்பூசம் - சித்தம் இரவு 10-30 வரை, கரிநாள். சுபகருமங்கட்கு உகந்தது. ராகு 10-22—11-55

வை 8 சனி (21-5-88) ஷஷ்டி முழுவதும், பூசம் - சித்தம் பி.இ. 1-00வரை, ஷஷ்டி விரதம், அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 8-52—10 25

வை 9 ஞாயி (22-5-88) ஷஷ்டி காலை 6-39 வரை, ஆயிலியம் பி.இ. 3-55 வரை, மரணம், சுபதினமன்று. ராகு 4-22—5-55

வை 10 திங் (23-5-88) ஸப்தமி காலை 9-03 வரை மகம் முழுவதும், மரணம், இராமா, சுபகருமங்களை விலக்குக. ராகு 7-22—8-56

வை 11 செவ் (24 5-88) அஷ்டமி பகல் 11-36வ. மகம் காலை 7-00 வரை, சித்தம், திவாமா, அசுபதினம். ராகு 2-52—4-26

வை 12 புத (25-5-88) நவமி பகல் 2-00 வரை, பூரம் பகல் 10-00 வரை, அமிர்தம், பகல் 2-00 மணிக்கு மேல் நற்கருமங்கள் செய்யலாம். ராகு 11-52—1-26

வை 13 வியா (26-5-88) தசமி மாலை 4-02 வரை, உத்தரம்-மரணம் பகல் 12-40 வரை, நாள் நன்றல்ல. ராகு 1-22—2-56

வை 14 வெ (27-5-88) ஏகாதசி-மரணம் மாலை 5-28 வரை, அத்தம்-சித்தம் பகல் 2-49 வரை, ஸர்வநிர்ஜல ஏகாதசிவிரதம் சுபகருமங்கட்கு உகந்த தினமன்று. ராகு 10-22—11-56

வை 15 சனி (28-5-88) துவாதசி மாலை 6-14வரை சித்திரை-மரணம் மாலை 4-18 வரை, அசுபதினம், ராகு 8-52—10-26

வை 16 ஞாயி (29-5-88) திரயோதசி மாலை 5-53 வரை, சுவாதி - சித்தம் மாலை 5-04 வரை, பிரதோஷ விரதம், கரிநாள், சுபகருமங்கட்கு நன்று. ராகு 4-22—5-56

வை 17 திங் (30-5-88) சதுர்த்தசி மாலை 5-38 வ. விசாகம்-மரணம் மாலை 5-10வரை, வைகாசி விசாகம், கரிநாள், சுபதினமன்று. ராகு 7-22 8-56

வை 18 செவ் (31-5-88) பூரணை மாலை 4-24வரை, அனுஷம்-சித்தம் மாலை 4-41 வரை பூரணை விரதம். ராகு 2-52—4-26

வை 19 புத (1-6-88) பிரதமை பகல் 2-40 வரை, கேட்டை-சித்தம் பகல் 3-43 வரை, அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 11-52—1-26

வை 20 வியா (2-6-88) துவிதியை பகல் 12-36வ. மூலம் பகல் 2-24 வரை, சித்தம், நற்கருமங்களுக்கு உகந்தது. ராகு 1-22—2-56

வை 21 வெ (3-6-88) திரிதியை பகல் 10-18வரை, பூராடம்-மரணம் 12-53 வரை, சுப கருமங்களை விலக்குக. ராகு 10-22—11-56

வை 22 சனி (4-6-88) சதுர்த்தி காலை 7-55 வரை, பஞ்சமி பி.இ. 5-29 வரை, உத்தராடம் பகல் 11-16 வரை, சித்தம், சுபகருமங்கட்கு உகந்த தினம். ராகு 8 52—10-26

வை 23 ஞா (5-6 88) ஷஷ்டி பி.இ. 3-09 வரை, திருவோணம்-அமிர்தம் காலை 9 40வரை, அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 4-22—5-56

வை 24 திங் (6-6-88) ஸப்தமி பி.இ. 12-25வரை, அவிட்டம் காலை 8-08 வரை, சித்தம், ராகு 7-22—8-56

வை 25 செவ் (7-6 88) அஷ்டமி இரவு 10-51வ. சதயம் காலை 6-44 வரை, பூரட்டாதி-மரணம் பி.இ. 5-28 வரை, அசுபதினம். ராகு 2-52—4-26

வை **26** புத (8-6-88) நவமி இரவு 8-57 வரை, உத்தரட்டாதி-சித்தம் பி.இ. 4-24 வரை, அசுப தினம். ராகு 11-52—1-26

வை **27** வியா (9-6-88) தசமி மாலை 7-14 வரை, ரேவதி பி.இ. 8-32 வரை, சித்தாமிர்தம், அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 1-22—2-56

வை **28** வெ (10-6-88) ஏகாதசி மாலை 5-44 வரை, அசுவினி பி.இ. 2-53 வரை, அமிர்தசித்தம், ஸர்வ ஏகாதசி விரதம், சுபகருமங்கட்கு உகந்தது.
ராகு 10-22—11-56

வை **29** சனி (11-6-88) துவாதசி மாலை 4-28 வரை பரணி பி.இ. 2-29 வரை, சித்தாமிர்தம், சனிப் பிரதோஷ விரதம், அசுபதினம். ராகு 8-53—10-27

வை **30** ஞாயி (12-6-88) திரயோதசி பகல் 3-31 வரை, கார்த்திகை பி.இ. 2-25 வரை, சித்தம், கார்த்திகை விரதம், சுபதினமன்று.
ராகு 4-23—5-57

வை **31** திங் (13-6-88) சதுர்த்தசி பகல் 2-54 வ. ரோகிணி பி.இ. 2-44 வரை, அமிர்தசித்தம், அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 7-23—8-57

வை **32** செவ் (14-6-88) அமாவாசை பகல் 2-44 வரை, மிருகசீரிடம்-சித்தம் பி.இ. 3-30 வரை, அசுபதினம். ராகு 2-54—4-27

## அதிக மாதம்

இவ்வருட சாந்திர ஜ்யேஷ்ட மாதம் வைகாசி மாதத்தில் ஆரம்பித்து அம்மாதத்திலேயே முடிவடைவதனால் வைகாசி மாதம் 'அதிக மாதம்' எனப்படும். ஆகவே இவ்வருட வைகாசி மாதத்தில் விவாகம், கிருகாரம்பம், கிருகப்பிரவேசம், உபநயனம், கும்பாபிஷேகம், பொன்னுருக்கல் முதலிய சுப கருமங்கள் விலக்கப்பட வேண்டும்.

முக்கிய குறிப்பு:

'சோதிடமலரில்' வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

ஆ-ர்

## மஹோற்சவம்

வசந்தகாலம் சித்திரை வைகாசி மாதங்களாகும். வசந்தகாலம் மஹோற்சவம் அலங்கார உற்சவம் என்பவற்றிற்குரிய காலமாகும். தினந்தோறும் ஆலய வழிபாட்டிலே பூஜையிலே அறிந்தோ அறியாமலோ ஏற்படும் குறைபாடுகளை நீக்கும் பொருட்டு செய்யப்படும் விழாவே மகோற்சவமாகும். இவை கும்பாபிஷேக தினத்தைக்குறித்து ஒருநாளில் செய்யப்படும் விழாவாகவும், யாகம் பலியிடுதல் தவிர்ந்த அலங்கார விழாவாகவும், சாந்திகர்மாவுடன் ஆரம்பித்து கொடியேற்றம், தேர், தீர்த்தம் வைரவர் சாந்தியுடன் நிறைவுறும் மஹோற்சவமாகவும் (கொடியேற்ற விழாவாகவும்) அமைகின்றது. இவ்விழா படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் முதலிய பஞ்சகிருத்தியங்களைக் குறிக்கின்றது. தினந்தோறும் பிம்பத்தில் (மூலமூர்த்தியில்) அபிஷேக ஆராதனைகளைக் கண்டுகளித்த நாம் நைமித்திய விசேடங்களின்போது பிம்பத்திலும் கும்பத்திலும் ஆராதனையைக் கண்டுவகையுற்ற நாம்; பிம்பத்திலும் கும்பத்திலும் தம்பத்திலும் ஒரே தினத்தில் ஒரே சமயத்தில் வழிபாட்டைக் காணுவது ஒன்றே கொடியேற்ற விழாவாகும் மகோற்சவத்தின் சிறப்பும் விசேடமுமாகும். பிம்பம், கும்பம், தம்பம் ஆகிய மூன்று இடங்களிலும் விசேட வழிபாடுகளைச் செய்வதே கொடியேற்ற விழாவாகும். மூலமூர்த்தியாகிய இறைவனுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்வதும் பிம்ப பூசையாகவும், யாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கும்பத்தில் இறைவனை ஆவாகித்து விசேடபூசை ஹோமம் இவற்றைச் செய்வது கும்ப பூசையென்றும் பலிபீடத்திற்கு முன் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கொடிமரத்தில் இறைவனைப் பதி பசு பாசம் ஆகிய மூன்றையும் ஒருசேரக்கொண்டு கொடிச்சீலையில் ஆவாகித்து திருவருளோடு ஏற்றி வலமாகச் சுற்றிக் கட்டிச் அவ்விடத்தில் இறைவனை ஆவாகித்து அபிஷேக ஆராதனைகள் தம்பபூசையாகவும் கொண்டுள்ளதே மகோற்சவ விளக்கமாகும். மேலும் கொடித்தம்பம் பதியாகவும் (இறைவனாகவும்) கொடிச்சீலை பசு(ஆன்மா)வாகவும், தர்ப்பைக்கயிறு பாசமாகவும், நூற்கயிறு அருட்சக்தியாகவும் கொண்டுள்ள கொடியேற்றம் என்னும் விழா சிவான்மாவாகிய ஆன்மாக்களை(பக்தர்களை) பரமாத்மாவிடம்(இறைவனிடம்) சேர்ப்பதைக் குறிப்பதேயாகும்.

— ஸ்ரீநந்தினி

## உதயலக்கினம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

### விபவ ஹூ வைகாசி மீ 1-ந் தேதி முதல் 32-ந் தேதி வரை. (14-5-88 முதல் 14-6-88 வரை)

| இங் | தமி | வாரம் | இடபம் | | மிதுன | கடகம் | சிங்கம் | கன்னி | துலா | விருச்சி | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் | மேடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ம.மி. முதல் (காலை) | ம.மி. வரை | ம. மி. வரை (காலை) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பி.ப) | மி. ம. வரை (மாலை) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை) (பி.இ) |
| மே | வை | | | | | | | | | | | | | | |
| 14 | 1 | சனி | 5 54 | 7 56 | 10 8 | 12 15 | 2 16 | 4 15 | 6 19 | 8 29 | 10 37 | 12 33 | 2 18 | 4 0 | 5 50 |
| 15 | 2 | ஞாயி | 5 50 | 7 53 | 10 5 | 12 12 | 2 13 | 4 12 | 6 16 | 8 26 | 10 34 | 12 30 | 2 15 | 3 57 | 5 47 |
| 16 | 3 | திங் | 5 47 | 7 49 | 10 1 | 12 8 | 2 9 | 4 8 | 6 12 | 8 22 | 10 30 | 12 26 | 2 11 | 3 53 | 5 43 |
| 17 | 4 | செவ் | 5 43 | 7 45 | 9 57 | 12 4 | 2 5 | 4 4 | 6 8 | 8 18 | 10 26 | 12 22 | 2 7 | 3 49 | 5 39 |
| 18 | 5 | புதன் | 5 39 | 7 41 | 9 53 | 12 0 | 2 1 | 4 0 | 6 4 | 8 14 | 10 22 | 12 18 | 2 3 | 3 45 | 5 35 |
| 19 | 6 | வியா | 5 35 | 7 37 | 9 49 | 11 56 | 1 57 | 3 56 | 6 0 | 8 10 | 10 18 | 12 14 | 1 59 | 3 41 | 5 31 |
| 20 | 7 | வெள் | 5 31 | 7 33 | 9 45 | 11 52 | 1 53 | 3 52 | 5 56 | 8 6 | 10 14 | 12 10 | 1 55 | 3 37 | 5 27 |
| 21 | 8 | சனி | 5 27 | 7 29 | 9 41 | 11 48 | 1 49 | 3 48 | 5 52 | 8 2 | 10 10 | 12 6 | 1 51 | 3 33 | 5 23 |
| 22 | 9 | ஞாயி | 5 23 | 7 25 | 9 37 | 11 44 | 1 45 | 3 44 | 5 48 | 7 58 | 10 6 | 12 2 | 1 47 | 3 29 | 5 19 |
| 23 | 10 | திங் | 5 19 | 7 21 | 9 33 | 11 40 | 1 41 | 3 40 | 5 44 | 7 54 | 10 2 | 11 58 | 1 43 | 3 25 | 5 15 |
| 24 | 11 | செவ் | 5 15 | 7 17 | 9 29 | 11 36 | 1 37 | 3 36 | 5 40 | 7 50 | 9 58 | 11 54 | 1 39 | 3 21 | 5 11 |
| 25 | 12 | புதன் | 5 11 | 7 13 | 9 25 | 11 32 | 1 33 | 3 32 | 5 36 | 7 46 | 9 54 | 11 50 | 1 35 | 3 17 | 5 7 |
| 26 | 13 | வியா | 5 7 | 7 9 | 9 21 | 11 28 | 1 29 | 3 28 | 5 32 | 7 42 | 9 50 | 11 46 | 1 31 | 3 13 | 5 3 |
| 27 | 14 | வெள் | 5 3 | 7 5 | 9 17 | 11 24 | 1 25 | 3 24 | 5 28 | 7 38 | 9 46 | 11 42 | 1 27 | 3 9 | 4 59 |
| 28 | 15 | சனி | 4 59 | 7 1 | 9 13 | 11 20 | 1 21 | 3 20 | 5 24 | 7 34 | 9 42 | 11 38 | 1 23 | 3 5 | 4 55 |
| 29 | 16 | ஞாயி | 4 55 | 6 57 | 9 9 | 11 16 | 1 17 | 3 16 | 5 20 | 7 30 | 9 38 | 11 34 | 1 19 | 3 1 | 4 51 |
| 30 | 17 | திங் | 4 51 | 6 53 | 9 5 | 11 12 | 1 13 | 3 12 | 5 16 | 7 26 | 9 34 | 11 30 | 1 15 | 2 57 | 4 47 |
| 31 | 18 | செவ் | 4 47 | 6 49 | 9 1 | 11 8 | 1 9 | 3 8 | 5 12 | 7 22 | 9 30 | 11 26 | 1 11 | 2 53 | 4 43 |
| ஜூன் 1 | 19 | புதன் | 4 43 | 6 45 | 8 57 | 11 4 | 1 5 | 3 4 | 5 8 | 7 18 | 9 26 | 11 22 | 1 7 | 2 49 | 4 39 |
| 2 | 20 | வியா | 4 39 | 6 41 | 8 53 | 11 0 | 1 1 | 3 0 | 5 4 | 7 14 | 9 22 | 11 18 | 1 3 | 2 45 | 4 35 |
| 3 | 21 | வெள் | 4 35 | 6 37 | 8 49 | 10 56 | 12 57 | 2 56 | 5 0 | 7 10 | 9 18 | 11 14 | 12 59 | 2 41 | 4 31 |
| 4 | 22 | சனி | 4 31 | 6 33 | 8 45 | 10 52 | 12 53 | 2 52 | 4 56 | 7 6 | 9 14 | 11 10 | 12 55 | 2 37 | 4 27 |
| 5 | 23 | ஞாயி | 4 27 | 6 29 | 8 41 | 10 48 | 12 49 | 2 48 | 4 52 | 7 2 | 9 10 | 11 6 | 12 51 | 2 33 | 4 23 |
| 6 | 24 | திங் | 4 23 | 6 25 | 8 37 | 10 44 | 12 45 | 2 44 | 4 48 | 6 58 | 9 6 | 11 2 | 12 47 | 2 29 | 4 19 |
| 7 | 25 | செவ் | 4 19 | 6 21 | 8 33 | 10 40 | 12 41 | 2 40 | 4 44 | 6 54 | 9 2 | 10 58 | 12 43 | 2 25 | 4 15 |
| 8 | 26 | புதன் | 4 15 | 6 17 | 8 29 | 10 36 | 12 37 | 2 36 | 4 40 | 6 50 | 8 58 | 10 54 | 12 39 | 2 21 | 4 11 |
| 9 | 27 | வியா | 4 11 | 6 13 | 8 25 | 10 32 | 12 33 | 2 32 | 4 36 | 6 46 | 8 54 | 10 50 | 12 35 | 2 17 | 4 7 |
| 10 | 28 | வெள் | 4 7 | 6 9 | 8 21 | 10 28 | 12 29 | 2 28 | 4 32 | 6 42 | 8 50 | 10 46 | 12 31 | 2 13 | 4 3 |
| 11 | 29 | சனி | 4 3 | 6 5 | 8 17 | 10 24 | 12 25 | 2 24 | 4 28 | 6 38 | 8 46 | 10 42 | 12 27 | 2 9 | 3 59 |
| 12 | 30 | ஞாயி | 3 59 | 6 1 | 8 13 | 10 20 | 12 21 | 2 20 | 4 24 | 6 34 | 8 42 | 10 38 | 12 23 | 2 5 | 3 55 |
| 13 | 31 | திங் | 3 55 | 5 57 | 8 9 | 10 16 | 12 17 | 2 16 | 4 20 | 6 30 | 8 38 | 10 34 | 12 19 | 2 1 | 3 51 |
| 14 | 32 | செவ் | 3 51 | 5 53 | 8 5 | 10 12 | 12 13 | 2 12 | 4 16 | 6 26 | 8 34 | 10 30 | 12 15 | 1 57 | 3 47 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: வை 32உ (14-6-88) பகல் 11-00 மணிக்கு என்ன லக்னம்? அடுத்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (10-12—12-13) சிங்க லக்னம்

# வைகாசி மாதக் கிரகநிலை

| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
|---|---|---|---|
| | குரு | புத சூ | சுக் |
| கும்பம்: செவ் ராகு | வைகாசி மாதக் கிரக நிலை | | கடகம் |
| மகரம் | | | சிங்கம்: கேது |
| சனி நெப் யுரே | | | |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

## கிரக மாற்றங்கள்

10உ (23-5-88) காலை 6-01க்கு மிது-புத
28உ (10-6-88) இரவு 7-52க்கு இட-சுக்
28உ (10-6-88) இரவு 11-33க்கு இட-புத
20உ புதன் வக்ராரம்பம்.
24உ புதன் அஸ்தமனம்
2உ குரு உதயம்.
9உ சுக்கிரன் வக்ராரம்பம்.
27உ சுக்கிரன் அஸ்தமனம்.

இம்மாதம் சனி, யுரேனஸ், நெப்டியூன் வக்ரத்தில் சஞ்சரிக்கின்றன.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வை | 2உ | (15-5-88) | பி.இ. | 12-54 | முதல் | இடபம் |
| | 5உ | (18-5-88) | காலை | 6-52 | ,, | மிதுனம் |
| | 7உ | (20-5-88) | பகல் | 3-57 | ,, | கடகம் |
| | 9உ | (22-5-88) | பி.இ. | 3-55 | ,, | சிங்கம் |
| | 12உ | (25-5-88) | பகல் | 4-42 | ,, | கன்னி |
| | 14உ | (27-5-88) | பி.இ. | 3-38 | ,, | துலாம் |
| | 17உ | (30-5-88) | பகல் | 11-12 | ,, | விருச்சிகம் |
| | 19உ | (1-6-88) | பகல் | 3-43 | ,, | தனுசு |
| | 21உ | (3-6-88) | மாலை | 6-29 | ,, | மகரம் |
| | 23உ | (5-6-88) | இரவு | 8-52 | ,, | கும்பம் |
| | 25உ | (7-6-88) | இரவு | 11-46 | ,, | மீனம் |
| | 27உ | (9-6-88) | பி.இ. | 3-32 | ,, | மேடம் |
| | 30உ | (12-6-88) | காலை | 8-26 | ,, | இடபம் |
| | 32உ | (14-6-88) | பகல் | 3-03 | ,, | மிதுனம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 6-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி வைகாசி மீ 32 உ பகல் 11-00மணிக்கு சிங்க லக்னம் என அறிந்து கொண்ட பின் 'சிங்கம்' என்ற கட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரக நிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

மாதம் பிறக்கும்போது உதயலக்கினம் சிங்கமாக அமைகிறது. இலக்கினாதிபதி சூரியன் 10-ம் வீட்டில் பகைபெற்றிருப்பதோடு செவ்வாயின் பார்வையையும் பெறுவதால் அரசியல் நிலைமையில் பல அசம்பாவிதங்கள் ஏற்படலாம். அரசியல் பிரமுகர்களுக்கும் நன்றல்ல. பல எதிர்பாராத சம்பவங்கள் நடக்கும். வியாழன் லக்கினத்தை நோக்குவதால் பொதுமக்கள் கஷ்டத்தின் மத்தியிலும் நன்மை பெறுவர்.

# வைகாசி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

**14-5-88 — 14-6-88**

சூரியன்: 14-5-88 பகல் 12-27
இடபராசிப் பிரவேசம்.
14-5-88 உதயம் காலை 5-53
14-5-88 உச்சம் பகல் 12-06
14-5-88 அஸ்தமனம் மாலை 6-19
29-5-88 உதயம் காலை 5-52
29-5 88 உச்சம் பகல் 12-07
29-5-88 அஸ்தமனம் மாலை 6-23

சந்திரன்: 15-5-88 அமாவாசை பி. இ. 8-41
17-5-88 சந்திரதரிசனம்
31-5-88 பூரணை மாலை 4-24
14-6-88 அமாவாசை பகல் 2-44

## கிரகங்கள்

புதன்: மாத ஆரம்பத்தில் சூரிய அஸ்தமனத்தின் மேல் மேற்கு வானில் 21பாகை உயரத்தில் தோற்றும் இக்கிரகம் 22-5-88இல் சூரியனில் இருந்து கூடியதூரம் விலகி 22°இல் தோற்றமளிக்கும். 2-6-88 இல் வக்கிரகதியிற் செல்லத் தொடங்கும். இக்கிரகம் 6-6-88 இல் மேற்கில் அஸ்தமனமாகும். மாத ஆரம்பத்தில் இடபத்தில் சஞ்சரித்த இக்கிரகம் 23-5-88 இல் மிதுனத்திலும், பின் 10-6-88 இல் மீண்டும் இடபத்திலும் சஞ்சரிக்கும்.

சுக்கிரன்: மாத ஆரம்பத்தில் அஸ்தமனத்தின் மேல் மேற்கு வானில் 36 பாகை உயரத்தில் பிரபையாகத் தோற்றும் இக்கிரகம் 22-5-88 இல் வக்கிரகதியிற் செல்லத் தொடங்கி, 9-6 88 இல் மேற்கில் அஸ்தமனமடையும், மாதத்தொடக்கத்தில் மிதுனராசியிற் சஞ்சரித்த இக்கிரகம் வக்கிரகதியில் 10-6-88 இல் இடபராசிக்கு மாற்றமடையும்.

செவ்வாய்: இம்மாதம் முழுவதும் கும்பராசியிற் சஞ்சரிக்கும் இக்கிரகம் மாத ஆரம்பத்தில் சூரிய உதயத்துக்கு முன் கிழ்வானில் 89° உயரத்தில் (உச்சியில்) காணப்படும். மாத முடிவில் உச்சியிலிருந்து 9பாகை மேற்கே சரிந்து காணப்படும்.

வியாழன்: மேடராசியில் சஞ்சரிக்கும் இக்கிரகம் 15-5-88 இல் கிழக்கில் உதயமாகும். மாத முடிவில் கிழ்வானில் உதயத்துக்கு முன் 31 பாகை உயரத்தில் காணப்படும்.

சனி: தனுராசியில் வக்கிரகதியிற் சஞ்சரிக்கும் இக்கிரகம் மாத ஆரம்பத்தில் சூரிய உதயத்துக்கு முன் மேற்கு வானில் 39 பாகை உயரத்தில் காணப்படும். மாத முடிவில் 11 பாகை உயரத்தில் காணப்படும்.

இந்திரன் (யுரேனஸ்): வக்கிரகதியில் தனுராசியில் சஞ்சரிக்கிறது.

நெப்டியூன் (வருணன்): வக்கிரகதியில் தனுராசியில் சஞ்சரிக்கிறது.

புளூட்டோ (குபேரன்): வக்கிரகதியில் துலாராசியில் சஞ்சரிக்கிறது.

## சமாகமங்கள்

17-5-88 இரவு 10 மணிக்கு சந்திரனுக்குத் தெற்கு புதன் 2½ பாகை. சந்திர அஸ்தமனத்தின் முன் பார்க்கவும்.

18-5-88 மாலை 7 மணிக்கு சந்திரனுக்குத் தெற்கு சுக்கிரன் 1 பாகை.

27-5-88 பி. இ. 4 மணிக்கு சந்திரனுக்கு வடக்கில் சித்திரை நட்சத்திரம் ஒட்டினாற்போற் காணப்படும்.

31-5-88 பிற்பகல் 3½ மணியளவில் சந்திரனால் கேட்டை நட்சத்திரம் மறைக்கப்படும். சந்திர உதயத்தின் மேல் சந்திரனுக்கு மேல் கேட்டை நட்சத்திரம் இருப்பதை மிக நுட்பமாக அவதானிக்கவும்.

1-6-88 பி. இ. 3 மணியளவில் சந்திரனுக்கு வடக்கு சனி 6 பாகை.

6-6-88 நள்ளிரவு சந்திரனுக்கு தெற்கு செவ்வாய் 2 பாகை.

11-6 88 பி. இ. 5 மணிக்கு சந்திரனுக்குத் தெற்கு குரு 5 பாகை.




இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.

14-5-88 முதல் 14-6-88 வரை

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

இவ்விராசியினருக்கு சூரியன் சுவர்ணமூர்த்தியாகி 2ல் சஞ்சாரம் செய்கின்றமையால் பொதுவாக நற்பலன்களே நிகழவேண்டும். தேசசுகம், குடும்பசுகம் சிறப்படையும். வருமானம் நன்றாக இருக்கும். செய்தொழிலில் முன்னேற்றமும் மனநிறைவும் உண்டாகும். அந்நியநாட்டுப் பிரயாண வாய்ப்பும் வசதிகளும் கிட்டும். வங்கிநிலை குறைவுபடாது.

குடும்பத்தர்கட்கு குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். கணவன் - மனைவி உறவு சிறப்படையும். புத்திரரால் உதவிகள் கிடைக்கும். சுபநிகழ்ச்சிகள் ஏற்படவும் இடமுண்டு.

வர்த்தகர்கட்கு வியாபாரம் சிறப்பாக அமையும்: முதலீடுகள் நன்கு விலைபோகும். புதியமுதலீடுகளை ஆரம்பிப்பதற்கும் உகந்த மாதமாகவே தென்படுகின்றது. அந்நிய நாட்டுடன் தொடர்புடைய வர்த்தகமும் நன்மைதரும்.

உத்தியோகத்தர்களுக்கு தொழில் மேன்மையுண்டு. மேலதிகாரிகளின் பாராட்டுதல்களும், ஆதரவும் கிட்டும். சக உத்தியோகத்தருடன் ஒத்துப்போகும் தன்மை ஏற்படலாம்.

விவசாயிகட்கு விவசாயி 9-மிடத்திலிருந்து குருவின் பார்வையைப்பெறுவதால் விவசாய வளர்ச்சிநன்றாக அமையும். விளைபொருட்களை சந்தைப்படுத்துவதில் நிகரலாபம் கிட்ட இடமுண்டு.


தொழிலாளர்களுக்கு வேலைகொள்வோரினால் பாராட்டுதல்களும், உதவிகளும் கிட்டும். கூடிய ஊக்கத்துடன் தொழில்புரிவோர் பெரும் லாபமீட்டுவர். மனச்சந்தோஷம் நிறைந்த மாதம்.

மாணவர்கட்கு கல்வியில் முன்னேற்றமும், விருத்தியும் உண்டாகும். புலமைப்பரிசில், பரீட்சைகளிற் சித்தி, பாராட்டுக்கள் என்பனவும் கிடைக்க இடமுண்டு. உயர்கல்வி வாய்ப்பும் கிடைக்கலாகும்.

பெண்களுக்கு குடும்ப அங்கத்தவரிடையே ஒற்றுமை வலுக்கும். கணவன்மாரின் அன்புக்குப் பாத்திரமாவீர்கள். காதலில் ஈடுபட்டுள்ளோர் சிறப்பான பலனடைவர்.

அதிஷ்ட நாட்கள்:- மே 21,22,23,24,25மு.ப.
ஜூன் 2,3பகல்

துரதிஷ்ட நாட்கள்:- மே 25இரவு26,27,30பி.ப.31.
ஜூன் 7பி.இ ,8, 9 பகல்.




கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2-ம் கால்

இவர்களுக்குச் சூரியபகவான் லோகமூர்த்தியாகி ஜன்மராசியில் பவனிவருகின்ருர். மூர்த்திபலம் குன்றியிருப்பதனுல் நன்மையான பலன்கள் கிடைக்கும் எனக் கூறமுடியாது. அத்துடன் அட்டமத்துச் சனியின் சஞ்சாரமும் இருப்பதால் அலைச்சல், பிரயாசை, செலவினங்கள் ஏற்பட்ட வண்ணம் இருக்கும். குடும்பசுகம், தேகசுகம் அடிக்கடி பாதிக்கப்படும். எதிர்பார்த்த வருமானங்களிலும் பார்க்கச் செலவுகள் அதிகரிக்கும். பகை விரோத மனப்பான்மை வலுக்கும்.

குடும்பத்தவர்கட்கு குடும்பத்தில் பிணக்குகள் உண்டாகும். வருமானம் குறைவுபடும். கணவன் மனைவி உறவில் விரிசல் தென்படும். பெரியோர் உதவி கிட்டாது.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக அமையாது. முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். புதிய முதலீடுகளை பொறுத்திருந்து ஆரம்பிப்பது சிறந்தது. வங்கி-வசதிகள் குன்றும்.

உத்தியோகத்தர்கட்கு வேலைப்பழு அதிகமாகும். கஷ்டப்பிரதேச இடமாற்றமும் கிட்டலாம். மேலதிகாரிகளுடன் பொறுமையுடன் நடந்து கொள்வது சிறந்தது.

விவசாயிகட்கு விவசாயம் வளம் பெருது. பயிர்ச் செய்கையில் ஊக்கம் இருக்காது. விவசாயப் பண்ணைகளும் நட்டத்தை ஏற்படுத்தும். கடன்பழு கூடுதலாகும்.

தொழிலாளர்கட்கு சனி 8-ல் இருப்பது கஷ்டத்தை ஏற்படுத்தும். ஒப்பந்தத் தொழில்கள் நன்மையளிக்காது. வேலை கொள்வோரிடத்தில் சண்டை, சச்சரவு ஏற்படலாகும்.

மாணவர்கட்கு கல்வியில் ஊக்கம் இருக்காது. மனம் ஒரு வழியில் நிற்காது. பரீட்சையில் மறதி ஏற்படும். பெறுபேறுகள் திருப்தியளிக்காது மனச் சஞ்சலத்தை ஏற்படுத்தும்.

பெண்களுக்கு இம்மாதம் உகந்ததல்ல. கணவன் மாரிடத்தில் வெறுப்புக்கு ஆளாக நேரிடலாம். மணமாகாத பெண்கள் காதல் லீலைகளால் கவலைப்பட நேரிடலாம்.

அதிஷ்டநாட்கள்: மே. 23,24,25,26,27
ஜூன். 3இரவு,4,5பகல்

துரதிஷ்டநாட்கள்: மே. 28,29,30காலை
ஜூன். 1இரவு,2,3பகல்,10,11




மிருகசீரிடம் 3.4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3

இவ்விராசியில் ஜனனமானவர்களுக்கு இம்மாதம் சூரியன் சுவர்ணமூர்த்தியாகி 12-ம் வீட்டில் சஞ்சரிக்கிருர். ஸ்தானபலம் குன்றியிருப்பினும் மூர்த்திபெலம் இருப்பதால் நற்பலன்கள் உண்டு. கடந்த காலங்களிலும் பார்க்க தேகசுகம் நன்ருக இருக்கும். பொருள் வருமானம் கணிசமான அளவு முன்னேறும். திடீர் பிரயாணங்கள் இடமாற்றம் என்பன ஏற்படும். எதிர்பாராத செலவுகளையும் சமாளிக்க வேண்டியிருக்கும். இன சன பந்துக்களால் நன்மையுண்டாகும்.

குடும்பஸ்தர்களுக்கு இடையிடையே சச்சரவுகள், அமைதியின்மை என்பன காட்டும். புத்திரர்களால் நற்பலன்கள் கிட்ட இடமுண்டு. அநாவசியச் செலவுகள் அதிகரிக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். கறுப்புச்சந்தை வியாபாரத்தில் ஈடுபட்டுள்

ளோர் அதிகலாபம் காண்பர். லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும் வியாழன் நல்ல லாபம்பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கும். வசதிகுறைந்த இடமாற்றங்களை எதிர்நோக்க வேண்டி இருக்கும். பதவிஉயர்வுகள் பின்வாங்கிக் கொண்டிருக்கும்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தியில் மன நிறைவு ஏற்படும். அரசமானியம்-பசளை என்பன உரியகாலத்தில் கிடைக்கும். உற்பத்திப் பொருட்களில் நல்ல லாபம் பெறுவர்.

தொழிலாளர்கட்கு வேலைவசதிகள் கிடைக்கும். தொழிற் பிணக்குகள் இருப்பின் சமாதானமாகத் தீரும். முயற்சிக்கேற்ற லாபம் கிடைக்கும். முதலாளிகளின் அனுசரணை உண்டு.

மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் மத்திமமாக இருக்கும். உடற்பயிற்சி, விளையாட்டு முதலியவற்றில் முன்னேற்றத்தையும் பரிசில்களையும் பெறுவர். கல்வி ஊக்கம் தேவை.

பெண்களுக்கு 7-ம் வீட்டில் சஞ்சரிக்கும் சனி மங்கல முயற்சிகளைப் பின்தள்ளும். தேவையற்ற விஷயங்களில் தலையிடாமல் இருத்தல் நன்று. இனபந்துக்களின் உதவி கிட்டும்.

அதிஷ்டநாட்கள்: மே. 25இரவு,26,27,28,29.
ஜூன். 6,7பகல்
துரதிஷ்டநாட்கள்: மே. 16,17,30பி.ப.31,1மு.ப.
ஜூன். 3இரவு,4,5பகல்



## கடகம்

புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

இவ்விராசியிற் பிறந்தவர்களுக்கு சூரியன் தாம்ர மூர்த்தியாக 11-ம் வீட்டில் சஞ்சாரம் செய்கின்றார். மூர்த்திபெலம் குன்றியிருப்பினும் ஸ்தானபெலம் பெற்றிருப்பது பல நன்மைகளைத் தரும். தேகசுகம், குடும்பசுகம் என்பன நன்றாக இருக்கும். 2ல் கேது சஞ்சரிப்பது பொருளாதாரத்துறையில் பல சிக்கல்களைத் தோற்றுவிக்கும். கொடுக்கல் வாங்கல் விடயங்களில் அவதானம் தேவை. 8-ம் வீட்டில் செவ்வாய் சஞ்சரிப்பதால் விபத்துக்கள் ஏற்படக்கூடும். குருவின் சஞ்சாரமும் நன்மைதரக்கூடியதல்ல. எதிர்பாராத திடீர் நெருக்கடிகள் ஏற்படலாம்.

குடும்பஸ்தர்களுக்கு பற்பல பிரச்சனைகள் அவ்வப்போது தோன்றி மறையும். குடும்பச் செலவுகள் வருமானத்திலும் பார்க்க அதிகமாக இருக்கும். கணவன் மனைவி நல்லுறவுகள் பாதிப்படையாது. இடமாற்றங்கள் ஏற்படலாம்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளால் ஏற்படும் வருமானம் விழ்ச்சியடையும். வாடிக்கையாளர்களில் ஒத்துழைப்பு அதிகமாக இருப்பினும் நிதி பற்றாக்குறை இருந்துகொண்டேயிருக்கும்.

உத்தியோகத்தர்கட்கு கடமைகளைச் சரிவரச் செய்வதில் தருமசங்கடமான நிலைதோன்றும். சக உத்தியோகத்தர்களின் உதவி உண்டு. கஷ்டப்பிரதேச இடமாற்றங்களும் நிகழலாம்.

விவசாயிகளுக்குப் பயிர்விருத்தி குன்றும். உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கும். கடன்தொல்லைகளும் நிம்மதியைக் குலைக்கும். வாழ்க்கைத் தரமும் கஷ்ட நிலையிலேயே இருக்கும்.

தொழிலாளர்களிடையே பிணக்குகளும் வேலையில்லாப் பிரச்சனைகளும் தொடரும். தினச் சம்பள ஊழியர் நன்மை பெறுவர். ஒப்பந்த வேலைகள் சரிவர நிறைவேற்ற முடியாமலிருக்கும்.

மாணவர் கல்வியில் அக்கறையற்றுக் காணப்படுவர். தேவையற்ற முயற்சிகளில் ஈடுபாடு கொள்வர். பலர் கல்வியைத் தொடரமுடியாமல் கஷ்டமடைவர்.

பெண்களுக்குள் வாக்குவாதங்கள் தொடரும். குடும்பப் பெண்கள் பொறுமையைக் கடைப் பிடிக்க வேண்டும். விவாக முயற்சிகள் பல சிரமங்களைக் கொடுக்கும்.

அதிஷ்ட நாட்கள்:- மே 28, 29, 30, 31.
ஜூன் 1மு.ப.7பி.இ.8, 9பகல்
துரதிஷ்ட நாட்கள்:- மே 18,19,20மு.ப.
ஜூன் 1இரவு,2,3மு.ப.6,7பக



## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1 ம் கால்

இவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் ரஜத மூர்த்தியாக 10-ம் ராசியில் சஞ்சரிப்பது சிறப்பா

னதாகும். தேகசுகம், குடும்பசுகம் நன்றாக இருக்கும். வருமானம் குறைவுபடாது. குடும்பத்தில் சுப கருமங்கள் இடம்பெறலாம். குருவின் 5-ம் பார்வை ஜன்மராசிக்கு இருப்பது மேலும் விசேடமாகும். அரசாங்கத்தால் உதவிகள் கிடைக்கும். வெளிநாட்டுத் தொடர்புகள் நன்கு அனுகூலமாகும்.

குடும்பத்தவர்களுக்கு மனச்சந்தோஷம் உண்டாகும். குடும்பவருமானம் சிறப்பாக அமையும். இனசன பந்துக்களுடன் ஒற்றுமை வலுக்கும். புத்திரர் உதவி உண்டு.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்புற நடைபெறும். முதலீடுகள் யாவும் நன்கு விலைபோகும். கள்ளமார்க்கட் வியாபாரம் கூடிய பலிதமளிக்கும். வங்கிநிலையும் குறைவுறாது.

உத்தியோகத்தர்கட்கு ஜன்மாதிபதி 10-ல் சஞ்சரிப்பது சிறப்பானதே!. தொழில் மேன்மை பதவியுயர்ச்சி, வசதியான இடமாற்றம், போதிய வருமானம் என்பன நன்றாக அமைய ஏதுவான காலமாகும்,

விவசாயிகளுக்கு விவசாயி சனி குருவின் பார்வையைப் பெற்று நற்சஞ்சாரம் செய்வது விவசாய வளர்ச்சியைக் காட்டுகின்றது. விளை பொருட்களை நன்கு சந்தைப்படுத்தலாம்.

தொழிலாளர்கட்கு தொழில்வசதிகள் நன்கு அமையும். நாளாந்த கூலித்தொழிலாளர் மேலும் சிறப்படைவர். சக தொழிலாளரிடையே அன்பும், ஆதரவும் பெருகும். வருமானம் குறைவுபடாது.

மாணவர்கட்கு கல்வி முன்னேற்றம் உண்டு. விவசாய, கணிதத்துறை மாணவர் விசேட நன்மையடைவர். பரீட்சைகளில் சித்தி, போட்டிகளில் வெற்றி என்பன ஏற்படலாம்.

பெண்கட்கு மன நிறைவான மாதம். குடும்பப் பெண்கள் கணவன்மாரின் அன்புக்குப் பாத்திரமாவர். விவாகமாகாத பெண்களின் வாழ்க்கையும் சந்தோஷகரமாகவே இருக்கும். விவாக முயற்சிகள் நன்மையளிக்கும்.

அதிஷ்டநாட்கள்: மே. 30பி. ப. 31
ஜூன். 1,2,3பகல், 10,11

துரதிஷ்டநாட்கள்: மே. 20இரவு, 21
ஜூன் 3இரவு, 4,5பகல், 8,9ப.



# கன்னி

**உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2**

இவ்விராசியிற் பிறந்தவர்களுக்கு சூரியன் லோகமூர்த்தியாகி 9ல் சஞ்சரிக்கின்றார். ஸ்தான பலம் நன்றாயிருப்பினும், மூர்த்திபலம் குன்றியிருப்பதனால் நன்மை, தீமை கலந்த பலன்களே இடம்பெறும். தேகசுகம், குடும்பசுகம் என்பன அடிக்கடி பாதிப்படையும். வருமானம் நன்றாக அமையும். குருபகவான் அட்டமத்தில் சஞ்சாரம் செய்வதனால் பலவிதத்திலும் நிம்மதி குன்றியே இருக்கும். பெரியோரின் அன்பும் ஆதரவும் கிட்டாது.

குடும்பஸ்தர்கட்கு குடும்பத்தில் நிம்மதியிருக்காது. திடீர்ச் செலவுகளும், நெருக்கடிகளும் ஏற்படலாகும். சகோதரர், புத்திரர் கஷ்டங்களும் உண்டாகும்.

வர்த்தகர்கட்கு வியாபாரம் நன்றாக அமையாது. பழைய நிலுவைக் கடன்களை அறவிட முடியாது. கடையடைப்பு முதலியவற்றால் வியாபாரம் வீழ்ச்சியுறும்.

உத்தியோகத்தர்களுக்கு தொழில் முன்னேற்றம் உண்டாகும். பொறுப்புக்கள் அதிகமாகும். மேலதிகாரிகளுடன் சாவதானமாக நடந்துகொள்ளவும். கஷ்டப்பிரதேச இடமாற்றமும் ஏற்படலாம்.

விவசாயிகளுக்கு விவசாயி சனி 4-ம் இடத்தில் குருவின் பார்வையைப் பெறுவதால் விவசாய வளர்ச்சி உண்டாகும். உற்பத்திச் செலவும், அநாவசிய செலவினங்களும் அதிகரிக்கும்.

தொழிலாளர்கட்கு வேலைப்பிணக்குகள் உண்டாகும். நாட்சம்பள ஊழியர்கள் சீவியம் பெரும் கஷ்டம் தரும். ஒப்பந்த வேலைகளும் பலிதமளிக்காது.

மாணவர்கட்கு கல்வியில் ஊக்கம் குன்றும். விளையாட்டு போன்ற துறைகளில் மிகுந்த ஈடுபாடு ஏற்படும். பரீட்சைகளில் சித்திகிட்டாது. போட்டிகளிலும் தோல்வி உண்டாகும்.

பெண்கட்கு மன நிம்மதி குன்றியமாதம். குடும்பத்தில் பிணக்குகள் ஏற்படினும் சமாளிக்கத் தக்கதாக இருக்கும். விவாகமுயற்சிகளும் சிரமத்தின் மத்தியில் கைகூடும்.

அதிஷ்டநாட்கள்:- மே 1இரவு,2,3பகல்
ஜூன் 12பி:ப:,13,14மு.ப

துரதிஷ்டநாட்கள்: மே 23,24,25மு.ப
ஜூன் 6,7,10,11



## துலாம்

சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1,2,3

இவ்விராசியினருக்கு சூரியன் தாம்ரமூர்த்தியாக 8-ல் சஞ்சரிப்பது கஷ்டமான பலன்களுக்கே ஏதுவாக அமைகிறது! தேகாரோக்கியம் பாதிக்கப்படும். எம்முயற்சியிலும் அநாவசியச் செலவுகள் வீண் அலைச்சல்கள் என்பன கூடுதலாக ஏற்படும், வருமானத்திலும் பார்க்க செலவினங்கள் அதிகமாக இருக்கும்: அந்நியதேச சஞ்சாரத்தால் அலைச்சலும், ஏமாற்றமும் அதிகரிக்கும்: இனபந்துக்கள் பகைவிரோதம், பொறாமை, பூசல்களும் உண்டாகலாம்: மனப்பயம் முதலியவற்றால் விபத்தும் ஏற்படலாகும்.

குடும்பஸ்தர்கட்கு கணவன்-மனைவி உறவில் விரிசல் ஏற்படலாகும். புத்திரர் உதவி கிடைத்தாலும், ஈற்றில் துன்பங்கள் உண்டாகும். அநாவசியச் செலவும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளால் வருமானம் குறைவுறும். பழைய முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். புதிய முதலீடுகளை பொறுத்து ஆரம்பிப்பது நன்று. வங்கிநிலை திருப்திகரமாக இருக்காது.

உத்தியோகத்தர்கட்கு வேலைப்பழு அதிகமாகும். மேலதிகாரிகளின் சீற்றங்களுக்குள்ளாக வேண்டி வரலாம். சக உத்தியோகத்தரிடையே மனக்கசப்புகள் ஏற்படும்.

விவசாயிகளுக்கு விவசாயி சனியின் சஞ்சாரம் நன்மையாகவே இருக்கின்றது. எனினும் விளை பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் சிரமங்கள் தோன்றலாம். போதிய லாபம் கிடைக்காது.

தொழிலாளர்கட்கு வேலையில்லாப் பிரச்சனை தோன்றும். ஒப்பந்த வேலைகளும் நட்டத்தையே ஏற்படுத்தும். சக தொழிலாளரிடையே பொறாமை போட்டி பூசல்கள் அதிகரிக்கும்.

மாணவர்கட்கு கல்வியில் அக்கறை இருக்காது: புறக்கருமங்களிலேயே தமது பொழுதைச் செலவிடவேண்டி வரும். பரீட்சைகளில் ஏமாற்றமும் தோல்வியும் உண்டாகும்.

பெண்களுக்குச் சோதனையான காலமாகும்: கன்னிப் பெண்களின் வாழ்க்கையில் பல தில்லுமுல்லுகள் உண்டாகலாம். விவாக முயற்சிகள் விழலுக்கு இறைத்த நீர் போலாகி விடும்.

அதிஷ்டநாட்கள்: மே. 18,19,20மு. ப.
ஜூன் 3இரவு,4,5,6,7பகல்

துரதிஷ்டநாட்கள், மே. 16,17,25இரவு,26,27ப:
ஜூன் 8,9பகல்,12ப.13மு. ப.



## விருச்சிகம்

விசாகம் 4, அனுஷம், கேட்டை

இவர்கட்கு சூரியன் சுவர்ணமூர்த்தியாகி 7-ம் இராசியில் சஞ்சரிப்பது நன்மையானதாகும். தேகசுகம், குடும்பசுகம் என்பன சிறப்பாக அமையும்; எடுத்த முயற்சிகளில் காரியசித்தியும், முன்னேற்றமும் உண்டாகும்: உடலாரோக்கியம், குடும்ப ஆரோக்கியம் முதலியன சீராக இருக்கும். அந்நிய நாட்டுப் பிரயாண வாய்ப்பும் கிடைக்க இடமுண்டு. குரு, பெரியோர் முதலியோரின் ஆதரவும் அன்பும் கிடைக்கும்.

குடும்பஸ்தர்கட்கு நல்லுறவு மேலோங்கும்; கணவன் மனைவி உறவில் நல்லபிப்பிராயம் கூடுதலாக இருக்கும். குடும்ப வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக அமையும். புதிய முதலீடுகள் ஆரம்பிக்கவும் உகந்தது. வங்கி நிலையும் சிறப்பாக அமையும். முதலீடுகள் நன்கு விலைபோகும். பழைய நிலுவைகளையும் அறவிடக் கூடியதாக இருக்கும். வாடிக்கையாளரால் நற்பெயர் உண்டாகும்.

உத்தியோகத்தர்கட்கு தொழில் மேன்மை ஏற்படும். சகஉத்தியோகத்தரின் உதவி ஒத்தாசை உண்டாகும், மேலதிகாரிகளின் ஒத்துழைப்பும் பாராட்டும் கிடைக்கும். வசதியற்ற இடமாற்றங்களும் கிடைக்கலாம்.

விவசாயிகளுக்குப் பயிருற்பத்தி நல்ல விளைவைக் கொடுக்கும். விவசாயப் பண்ணைகளில் வருமானம் நன்றாக இருக்கும். விளைபொருட்களை சந்தைப்படுத்துவதால் லாபம் கிடைக்கும்.

தொழிலாளர்கட்கு தொழில் மேன்மையுண்டாகும். வேலைகொள்வோரால் பாராட்டப்படுவீர்கள்; ஒப்பந்த வேலைகளால் லாபம் ஏற்படலாம். சகதொழிலாளரிடையே ஒற்றுமை வலுக்கும்.

மாணவர்கட்கு கல்வியில் முன்னேற்றமும், ஈடுபாடும் உண்டாகும். கணித, கலைத்துறை மாணவர்கள் கூடிய சிறப்பைப் பெறுவர். பரீட்சைகளில் சித்தியும், பாராட்டும் கிடைக்கலாம்.

பெண்கட்கு சிறப்பான மாதம். குடும்பப் பெண்கள் கணவன்மாரின் அன்புக்குப் பாத்திரமாவர். வீட்டில் சுபகருமங்கள் இடம்பெறலாம். காதலில் ஈடுபட்டவர்கள் மிகவும் நற்பலனை அடைவர்.

அதிஷ்ட நாட்கள்:- மே 20இரவு,21,22பகல்
ஜூன் 6,7,8,9பகல்

துரதிஷ்ட நாட்கள்:- மே 18பகல்,19,20மு.ப.28,29
ஜூன் 10,11



## தனுசு

மூலம், பூராடம் உத்தராடம் 1-ம் கால்

தனுராசியினருக்கு சூரியபகவான் ரஜஸமூர்த்தியாகி சஞ்சாரம் செய்வது பொதுவாக நன்மையாகும். தேகசுகம், குடும்பசுகம், சிறப்பானதாக அமையும். குடும்பத்தில் விசேடமங்களக் கொண்டாட்டங்களும் இடம்பெறலாம். குருபகவான் திரிகோணத்தில் சஞ்சரிப்பதால் நிதிநிலைமைகளும் நன்றாக இருக்கும். நண்பர்களிடையே ஒற்றுமை வலுக்கும். சிலருக்கு வெளிநாட்டுப் பிரயாண வசதிகள் நன்கு அமையும்.

குடும்பத்தில் மனமகிழ்ச்சி உண்டாகும், குடும்பவருமானம் முன்னேற்றமடையும் புத்திரர் முன்னேற்றம் நன்றாக இருக்கும். வங்கிநிலை குறைவுபடாது.

வர்த்தகர்கட்கு வியாபாரம் நன்றாக அமையும். ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் சிறப்படையும். அந்நியநாட்டுத் தொடர்புடைய வர்த்தகம் மேலும் நன்மையளிக்கும்.

உத்தியோகத்தர்கட்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் உண்டாகும்; சக உத்தியோகத்தரிடையே சுமுகநிலை மேலோங்கும். வசதியான இடமாற்றங்கள் கிடைக்கப்பெறும்.

விவசாயிகட்கு பயிர் உற்பத்தி பலிதமளிக்கும் விவசாயப் பண்ணைகளில் கணிசமான முன்னேற்றம் உண்டாகும். விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதால் லாபம் கிட்டும்.

தொழிலாளர்கட்கு கணிசமான வேலைவசதிகள் கிட்டும். தொழிற் பிணக்குகளும் நன்கு சமாளிக்கப்பட்டு விடும். வேலை கொள்வோரிடத்தில் நல்லபிப்பிராயம் உண்டாகும்.

மாணவர்கட்கு கல்வியில் ஊக்கம் உண்டாகும். சட்டம், கணிதத்துறை மாணவர்கள் கூடிய முன்னேற்றமடைவர். பரீட்சை முடிவுகள் திருப்தியளிக்கும்.

பெண்களுக்கு நன்மையான மாதமாகும். விவாக முயற்சிகள் சிறப்பான பலனைத்தரும். கன்னிப் பெண்கள் காதல் வாழ்க்கையில் கூடுதலாக ஈடுபடநேரிடும்.

அதிஷ்டநாட்கள்: மே 23,24,25மு.ப.
ஜூன் 8,9,10,11

துரதிஷ்டநாட்கள்: மே 16,17,20இரவு,21,22பகல்
30பி.ப,31, ஜூன் 1மு.ப.



## மகரம்

உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1, 2,

மகரராசியினருக்கு இம்மாதம் சூரியன் லோகமூர்த்தியாக 5-ம் இராசியில் சஞ்சாரம் செய்கின்றார். மூர்த்திபலம் குறைந்திருந்தாலும் ஸ்தான

பலம் நன்றுயிருப்பதனுல் நன்மை, தீமை கலந்த பலன்களே இம்மாதம் நிகழும். குடும்பசுகம், தேக சுகம் இடையிடையே பாதிக்கப்படினும் கஷ்டந்தர கூடியதாக இல்லே. வருமானத்திலும் பார்க்க செலவுகள் அதிகரிக்கும். அலேச்சலும் பிரயாசை யும் கூடுதலாக இருக்கும். அந்நிய தேச சஞ்சா ரம் நன்மையைத் தராது.

குடும்பத்தர்கட்கு குடும்பத்தில் சுமுக நிலே தென்படும். நிதிநிலேமை பற்றுக்குறையாக இருக் கும். இனபந்துக்களிடையே துக்ககர சம்பவங்க ளும் நிகழக் கூடும். புத்திரர் உதவி கிட்டாது.

வர்த்தகர்கட்கு வியாபாரம் சுறுசுறுப்பாக அமையினும் எதிர்பார்த்த லாபம் கிடைக்க மாட் டாது. பழைய முதலீடுகள் நன்மையைக் கொடுக் கும். புதிய தொழில்களே பொறுத்து ஆரம்பிப்பது நல்லது.

உத்தியோகத்தர்கட்கு சூரியபகவான் மூர்த்தி பலம் குன்றியிருப்பதனுல் தொழில்த்துறையில் கஷ்டபலன்களே அதிகரிக்கும். சிலருக்கு பதவி நீக்கம், அல்லது பதவிமாற்றம் உண்டாகலாம். சக உத்தியோகத்தரால் ஒத்துழைப்புக் கிட்டாது.

விவசாயிகளுக்கு விவசாய வளர்ச்சி நன்மை யைக் கொடுக்கத்தக்கதாகத் தெரியவில்லே. விவ சாயக் கிரகம் மறைந்திருப்பதனுல் விவசாயம் பலிதமளிக்காது. பண்ணே விவசாயமும் உகந்த தாக இல்லே.

தொழிலாளர்கட்கு வேலேப்பழு அதிகமாகும். செய்யும் வேலேகளுக்கேற்ற கூலி கிடைக்காமல் போகலாம். ஒப்பந்தத் தொழில் செய்வோருக்கு சிறிது நன்மை கிட்ட இடமுண்டு. வாழ்க்கைத் தரம் உயர்வடையும்.

மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சி நன்மை யளிக்காது. பரீட்சையில் தோல்வி, ஆசிரியர்-மாணவர் உறவில் பிணக்கு என்பன உண்டா கும். பிறநாட்டுக் கல்வி கற்போர் சிறிது நன்மை அடைவர்.

பெண்களுக்கு இம்மாதம் முன்னேற்றமான தாகத் தெரியவில்லே. குடும்பத்தில் கணவன் மாருடன் ஒத்துப்போகும் மனப்பான்மை குன்றி இருக்கும். விவாகமாகாதோருக்கு விவாக முயற் சிகள் பலிதமளிக்காது.

அதிஷ்டநாட்கள்: மே. 16,17,25இரவு,26,27ப. ஜூன். 10,11,12,13,14மு.ப.

துரதிஷ்டநாட்கள்: மே. 18,19,20மு.ப.23,24, ஜூன். 1இரவு,2,3பகல்.



# கும்பம்

அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3

கும்பராசியில் ஜனனமானவர்களுக்கு சூரியன் தாம்ரமூர்த்தியாகி 4-ம் வீட்டில் சஞ்சரிக்கிறுர். செவ்வாய், இராகுவின் சஞ்சாரமும் லக்கினத் தைத் தாக்குகின்றன. அடிக்கடி தேககசுகம் பாதிக் கப்பட்டவண்ணம் இருக்கும். குருவின் சஞ்சார மும் நற்பலன் தராது. பொருளாதாரக் கஷ்டம் கொடுக்கல் வாங்கல் பிணக்கு முதலியன மாறி மாறி நிகழும். மனதில் நிம்மதி இராது. குடும் பத்திலும் சச்சரவுகள் காணும். தொழில் சம்பந் தமான பிரச்சனேகள் உருவாகும். முயற்சிக்கேற்ற லாபம் கிட்டாது. குலதெய்வ வழிபாடு செய்து வரவும்.

குடும்பஸ்தர்களுக்கு பிரச்சனேகள் தோன்றிய வண்ணமிருக்கும். வருவாய் குன்றும். கடுமை யான உழைப்பால் கஷ்டமடைய நேரும். எனி னும் கணவன் மனேவி உறவுகள் பாதிப்படை யாது. புத்திரர்களால் நன்மையுண்டு.

வியாபாரிகளுக்கு புதிய முதலீடுகளுக்கு ஏற்ற மாதமல்ல. செவ்வனே தொழிலேச் செய்வதில் பல கஷ்டங்கள் தோன்றும். வாடிக்கையாளர் களின் ஒத்துழைப்புக் குறையாது. கடன்பணத் தைப் பெற்றுக்கொள்வதும் கடினம்.

உத்தியோகத்தர்கட்குப் பொதுவாக மத்திம பலனுக்குரிய மாதம். வேலேப்பழு அதிகமாக இருக்கும். சகஉத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு குறையும். மேலதிகாரிகளின் வெறுப்புக்குப் பாத் திரமாகாமல் சமாளித்துக்கொள்ள வேண்டும்.

விவசாயிகளுக்கு சனி 11ல் சஞ்சரிப்பது நன்று பயிர்கள் நன்கு பலிதமாகும். தானியக் கொள்வ னவு, விதைப்பு முதலியன மேற்கொள்ள அனு கூலமான காலம். அறுவடைப் பொருட்களேச் சந்தைப்படுத்துவதில் லாபம் குறையும்.

தொழிலாளர்களுக்கு கடின உழைப்பும் ஊக் கமும் இருந்தாலும் ஊதியம் குறைவாகவேயிருக் கும். லக்கினத்தில் ராகு இடையிடையே சலிப்

வடையச் செய்யும். சகதொழிலாளர்களுடன் இணைந்து செயற்படுதல் நன்மை பயக்கும்.

மாணவர்களுக்கு புதன் 4ல் சஞ்சரிப்பது உற்சாகத்தையும் சித்தியையும் கொடுக்கும். விளையாட்டுக்களில் அதிக சிரத்தை தோன்றும். நேர் முகப் பரீட்சை முதலியவற்றில் பலிதம் குறைவாகவே இருக்கும்.

பெண்களுக்கு மங்கலகருமங்கள் தாமதமடையும்: குடும்பப் பெண்களுக்கு சச்சரவுகளும், நிம்மதிக் குறைவும் தோன்றும். அமைதியையும், மௌனத்தையும் கடைப்பிடித்தல் நன்று.

அதிஷ்ட நாட்கள்:- மே 16,17,18 19,28,29
ஜூன் 12,13,14.

துரதிஷ்ட நாட்கள்:- மே 20இரவு, 21,22பகல்,26.
ஜூன் 3இரவு.4,5பகல்.




பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

இவ்விராசியிற் பிறந்தவர்களுக்கு சூரியன் ரஜத மூர்த்தியாகி 3-ம் வீட்டில் சஞ்சரிப்பினும் இலக்கினாதிபதி குரு 2-ம் வீட்டில் சஞ்சரிப்பது நற்பலனுக்குரியதாகும். தொழில், வருவாய் என்பன சிறப்பாக இருக்கும். தேகசுகம் பாதிக்கப்படமாட்டாது. குடும்பத்தில் நல்லுறவு நிலவும்: புத்திரர்களாலும், இனபந்துக்களாலும் நன்மை உண்டு. வாக்குவன்மைகளால் எக்கருமங்களையும் சாதித்துக்கொள்ளலாம். தடைப்பட்ட கருமங்கள் நிறைவுபெறும். அந்நிய சகாயங்களால் பொருள் லாபம் கிட்டும். சிறு பிரயாணங்கள் நன்மையளிக்கும்.

குடும்பஸ்தர்களுக்கு நிம்மதியும், மகிழ்ச்சியும் தரக்கூடிய மாதமாகும். பணவருவாய், செல்வாக்கு என்பன சிறக்கும். வீட்டில் நன்மையான கருமங்கள் நிகழும். கடன் பாக்கிகள் வசூலாகும். அந்நிய சகாயங்கள் உண்டு.

வியாபாரிகளுக்கு செட்டிபுதன் 3ல் இருப்பது வியாபாரம் மத்திமமாக இருக்கும். கள்ளச்சந்தை வியாபாரம் நஷ்டத்தில் முடியும். வங்கிநிலைகள் ஓரளவு சமாளிக்கலாம்: கடன் விஷயத்தில் அவதானமாக இருக்கவும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்க இடமில்லை. இடமாற்றங்கள் முதலியன அமைதியின்மையைக் கொடுக்கும். தனக்குக் கீழ் இருக்கும் கனிஷ்ட உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புக் கிட்டாது.

விவசாயிகளுக்கு கஷ்ட பலன்களே அதிகமாகும். முதலீடுகளுக்கேற்றளவு வருவாய் கிடைப்பது கஷ்டம். இயற்கையும் ஒத்துழையாது. எனினும் மாதப் பிற்பகுதியில் நிலைமை சீரடையும்.

தொழிலாளர்களுக்கு சொந்தத் தொழில்களில் விருத்தியும் லாபமும் கிட்டும். முதலாளி வர்க்கத்தால் இடையூறுகள் ஏற்படலாம். புதுத் தொழில் தேடுவோர் நன்மை பெறுவர். முதலீடுகளைப் பொறுத்துச் செய்தல் நன்று;

மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமிருக்காது: களியாட்டங்களிலும், விளையாட்டுக்களிலும் பொழுதைப் போக்குவர். கலைத்துறை மாணவர்கள் முன்னேற்றம் காண்பர்.

பெண்களுக்கு சுக்கிரன் 4-ல் சஞ்சரிப்பது மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கும். விவாகப் பேச்சுக்கள் வெற்றியளிக்கும். களியாட்டங்கள் சிறப்புற நடக்கும்.

அதிஷ்டநாட்கள்: மே. 18,19,20,21,22ப.30பி.ப
ஜூன். 1மு.ப. 14பி.ப.

துரதிஷ்டநாட்கள்: மே. 23,24,25மு: ப.24,29.
ஜூன். 6,7பகல்

## விவாகம் தாமதமா?

ஒரு ஜாதகத்தில் சனி சந்திரனைத் தாக்குவதால் விவாகம் பிந்தும். விவாகத்திற்கு தடையேற்படும். தெய்வத் தன்மையை உண்டுபண்ணும்.

வியாழன் 7ல் நிற்பதும் விவாகத்திற்கு காலதாமதமாகும். ஆனால் வரும் பங்காளி மிக திறமாகவிருக்கும். வெள்ளி 7-ல் நின்றாலும் இதே கதிதான்.

செவ்வாய், இராகு 7-ல் நின்றாலும் விவாகம் பிந்தும்: இராகு நிற்பின் வரும் பங்காளி ஜாதகரின் அந்தஸ்திலோ அல்லது ஜாதியிலோ, சமயத்திலோ வேறுபடுவர். — வே. சி

# மனிதரில் பன்னிரு வகையினர்

— கா. சின்னையா. சங்குவாரி, கம்பளை. —

பழங்காலத்தில் மன்னர்களுடைய அவைக் களத்தில் ஜோதிடர்களும் இன்றியமையாத உறுப்பினர்களாயிருந்து அரசுக்கு உதவிசெய்து வந்துள்ளார்கள். ஐம்பெருங்குழு என்பன அரசனுக்குத் துணையாக உள்ள குழுவினர். அதாவது புரோகிதர், மருத்துவர், நிமித்திகர், பிராமணர், அமைச்சர் என்போர். இவருள் நிமித்திகரே கணிகர் அல்லது ஜோதிடர். இவர் நாளும் கோளும் பார்த்து வருவனவற்றை உரைப்பார். சகுனம் பார்த்து இது நடக்கும் என்பார். நடக்கப்போவதைச் சொல்வார். அங்க அடையாளங்களைப் பார்த்து இவருக்கு இன்ன நிகழும் என்று முன் கூட்டியே சொல்வார். நாள்தோறும் இன்னநாள் திதி வாரம் என்று பஞ்சாங்க விபரங்களை அரசருக்கு எடுத்துரைப்பார். ஜோதிஷம் அரசுக்கு மகத்தான உதவியாகும்.

சிருஷ்டி கர்த்தாவான பிரம்மதேவன் மனிதர்களின் நெற்றியில் அழுத்தமாக எழுதியுள்ள அக்ஷர வரிசைக்கு 'ஜாதகம்' என்று பெயர். அப்படிப்பட்ட புனிதமான ஜாதகத்தை எழுதிய பிரம்மதேவனின் ஜாதகத்தையே கணித்து பலன் கூறக்கூடிய ஆற்றலும் ஈரேழு பதினான்கு லோகங்களையும் அங்கு நடைபெறும் சுபாசுப பலன்களை 12 ராசிகளில் அடக்கிக் கணித்துக்கூறும் வல்லமை படைத்தவர்களை 'ஜாதிஷர்' என்றும் 'தைவக்ஞர்' என்றும் கூறுவது தர்மசாஸ்திரம்.

எனவே ஆண்டவன் படைத்த சகல பிராணிகளிலும் மனிதனே சிறந்தவன் என்று கூறுகிறார்கள்: அரிது அரிது மானிடராகப் பிறத்தலரிது என்பது ஔவை பிராட்டியாரின் வாக்கு.

மனிதர்களை '12 வகை' மனப்பான்மை உள்ளவர்கள் என்று நக்கீரர் கூறியுள்ளார். அதனை அவர் கூறும் முறையை அடிப்படையாகக்கொண்டு கவனித்தால் மனிதருள் ஆடு, காளை, காதல் ஜோடி, நண்டு, சிங்கம், பெண்மை, தராசு, தேள், வீரன், முதலை, குடத்துடன் நிற்கும் சுயநலப் புலி, இருவித கண்ணோட்டமுள்ள மீன்கள் என இவைகளைப் புலப்படுத்தியுள்ளார்கள். இவர்களைக் கொண்டு ஆண்டவன் அருளைப்பெற்று ஜோதிஷர் வாயிலாக ஆட்சியை மனம்போல் மனத்தத்துவம் அறிந்து இயற்கையின் பெருமை மன்னன் அறிந்து தனது வீட்டை சுபீட்சமாக வைத்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

மேடம்:- மேஷராசியில் (சந்திரன் மேஷத்தில் சஞ்சரிக்கும் காலம்) பிறந்தவர்களைக்கொண்டு தக்கபடி உதவிசெய்து மகிழ்வித்து வேலை வாங்கலாம். ''தகரோடு எதிரிடேல்'' எனச் சுருங்கச் சொல்லி விளக்கமளிக்கிறார் நக்கீரர். தகர் என்பது செம்மறி ஆடு - கடா - இது மேஷராசியைக் குறிக்கும்: இதில் சந்திரன் அமைந்தவர்களோடு எதிர்த்துப் பயன் தராது. ஒருகால் விபரீதமாகவும் முடியலாம். எனவே மேஷராசிக்காரரை ஆதரவு மொழிகளால் பேணிக்கொள்ளுதல் நலம் என்பது குறி. அரசு கவனிக்கவேண்டிய விஷயத்தில் இதுவும் ஒன்று.

இடபம்:- விருஷப ராசியில் பிறந்தவர்கட்கு நிர்வாக சக்தி அதிகம் இருக்கும். எவ்வளவு கடுமையான வேலையானாலும் தயங்காது செய்து முடிப்பர். இளங்காளையைத் தக்கபடி உபயோகித்துக் கொள்ளலாம். 'எருதோடு தோரேல்' எருது - காளை, ரிஷப ராசி, இதில் சந்திரன் அமைந்தவருக்கு நல்ல நிர்வாக சக்தியும் பொறுப்பேற்று நடாத்தும் திறனும் அமைந்து காணப்படும். எனவே அத்தகையரோடு எதிர்த்துத் தோல்வியுற வேண்டாம் என்று ஜாடை செய்கின்றார்.

மிதுனம்:- காதல் ஜோடிகளை ஜோதிடக்கலை மிதுனம் என்று அழைக்கிறது. இந்த ராசிக்காரர்கள் கலைசம்பந்தமான வேலைகளை நன்முறையிலும் திறமையுடனும் செய்வார்கள். இப்படிப்பட்ட பதவியை புகழுடன் நடத்த இவர்களிடம் ஒப்படைக்கலாம். 'தண்டு கொண்டில் புகேல்' என்பது வீணையின் அடித்தண்டைக் குறிக்கும். மிதுன ராசி பொதுவாக ஆணும் பெண்ணும் இணைந்து கையில் வீணை ஏந்தி மகிழ்ச்சியுடன் விளங்கும் தோற்றம். இந்த ராசி புதனுக்குடையது.

கடகம்:- கடற்கரை நண்டானாலும் காணியில் வாழும் நண்டானாலும் குணம் ஒன்றுதான்.

பிடிக்கப் போனல் உள்ளே பதுங்கும்; இதில் பிறந்தவர்களை விவசாயம், அணைகட்டுதல், மற்றும் தண்ணீர் சம்பந்தமான எல்லா வேலைகளுக்கும் உபயோகித்துக் கொள்ளலாம். என்றாலும் சாதுர்யமாக வேலைவாங்க வேண்டும். அதிகம் பேசினல் ஆபத்துத்தான். 'நண்டானுக்கு இடங் கொடேல்' என்கிறார் ஆசிரியர்; நண்டு என்ன செய்கிறது. சிறிய நண்டைப் பெரியநண்டு சமயம் கிடைத்தபொழுது தாக்கும். எனவே இந்தப் பேர்வழிக்கு இடங்கொடாதபடி சாதுரியமாக நடந்துகொள்ள வேண்டும் என்பது கருத்துப் போலும்.

சிங்கம்:- சிங்கம் சிங்கமேதான். பெரியஸ்தாபனம் அல்லது அரசாங்கத்தின் முக்கிய இலாக்காவில் நிர்வாகத்தை இவரிடம் ஒப்படைக்கலாம். நிர்வாகம் சீராகவும் முருக்காகவும் இருக்கும். சுக்ரீவ ஆக்ஞைதான். அரசனுக்குப் புகழ் அதிகம் வரும். 'சிம்மத்தானேடு செருக்கேறேல்' சிங்கத்தை நோக்கி ஆணவத்தோடு பேசல், பரிகசித்தல் தகுமா? பயன் தருமா? எனவே இந்த ராசிக்காரரிடம் உஷாராக நடந்துகொள்ள வேண்டும் என்பது கருத்து.

கன்னி:- 'கன்னியைக் கைவிடேல்' என்று கூறுகிறார் நக்கீரர். கன்னியை யாராவது கைவிடுவார்களா? இந்த ராசியில் அதிலும் ஹஸ்த நட்சத்திரத்தில் பிறந்த பெண் கணவனுக்கு அமுதம் போல் தோற்றுவாள். எனவே இந்த ராசிப் பெண்களிடம் முக்கிய இலாக்காவை நம்பி ஒப்படைக்கலாம். அந்த ஸ்தாபனம் பெருமை பெறும். "கன்னியை (கன்னிமகளை)க் கைப்பிடி' கன்னி ராசி புதனுக்கு உச்சவீடு. இங்கு சந்திரன் அமைந்திருப்போரைக் கைவிடாது சேர்த்துக் கொள் என்பது நல்லுரை.

துலாம்:- தராசு எல்லாவற்றையும் எடை போடும் கருவி. இந்த ராசியில் பிறந்தவர்களை நீதி, போலீஸ் இவைகளில் உபயோகித்துக்கொள்ளலாம். வர்த்தக ஸ்தாபனத்தில் இவர்கள்சேவை மிக விசேஷமாக இருக்கும். அதிஷ்டம் தரும். அதனல்தான் 'துலாத்தோன் எவ்விடத்தும் தோலான்' என கூறினர் பெரியார். பழைய நபர் புதிய நபர் என்ற வேற்றுமையின்றி எல்லோரிடமும் சம நோக்குடன் நடந்துகொள்ளும் குணம் நிரம்பக் காணும்.

விருச்சிகம்:- 'தேளுக்கு இடம் கொடுத்தால் ஜாமத்திற்கு ஜாமம் கொட்டும்' என்பது பழமொழி. விருச்சிகச் சந்திரன் பேர்வழிக்கு இதே குணம்தான் இருக்கும்; சேனை, காவல் போன்ற இலாக்காக்களை இவர்களிடம் ஒப்படைக்கலாம். நாட்டில் நியாயமற்ற செயல்கள் குறையும். எனவே 'தேளானைப் பேணிக்கொள்' என்கிறார் நக்கீரர்.

தனுசு:- 'வில்லானை சொல்லால் வளை' தனுசைக் கையிலேந்திய உருவம் எப்பொழுதும் போருக்குத் தயாரானவரிடம் நாம் என்ன செய்ய வேண்டும்? நல்லுரையால் நலம்பெற்று வருதலே வெல்லும் முறையாம். 'தனுசில் பிறந்தவன் தைரிய புருஷன்' என்பது பழமொழி. எந்த இலாக்காவை இவரிடம் ஒப்படைத்தாலும் மிகத் திறமையான நிர்வாகத்தை எதிர்பார்க்கலாம்.

மகரம்:- இந்தப் பெரும் முதலையிடம்போகும் போது எவருக்கும் பெரும் பயம்தான். இந்த ராசிக்காரரிடம் முரட்டுக்குணம் அதிகம் இருக்கும். மகர ராசியில் சந்திரன் அமைந்தவரிடம் வழக்குத் தொடுத்து வெல்ல முடியாது என்பது குறிப்பு.

கும்பம்:- குடத்தில் பிறந்த இந்த ராசிக்காரரிடம் இரக்கசிந்தை குறைந்து காணும். சுயநலப் பேர்வழி. ஆனல் தக்கபடி இவரை உபயோகித்துக் கொண்டால் எல்லா வேலைகளிலும் வெற்றி கிடைக்கும். 'கும்பத்தான் முன்னின்று வெல்வான்' என்கிறார் ஆசிரியர். இந்த ராசி சனியினுடைய வீடு ஆனலும் இங்கு சந்திரன் வாய்க்கப்பெற்றல் கோர்ட்டு விவகாரம் தண்ணீர் பட்டபாடு. எனவே இவரிடம் விவகாரமிட்டு தோல்வியுற வேண்டாம் என்கிறார்.

மீனம்:- கடைசியாக 'மீனத்தானை விடேல் விடேல்' என்று நக்கீரர் இருமுறை சிபார்சுசெய்கிறார். ஏன் இவர்மேல் அவ்வளவு அபிமானம்? மீனைப்போல் அலைந்து உழைக்கும் பேர்வழி; இவரை அரசாங்க நிர்வாகத்தில் எந்த இலாக்காவிலும் உபயோகித்துக் கொள்ளலாம். நியாயமாக நடந்துவரும். இங்கு சந்திரன் அமைந்தவருக்கு சிறந்த மதிநுட்பம் அமைந்திருக்குமாம். ஏன்? நேர்பார்வை புதனது வீட்டில். ஆகவே இவரது ஆலோசனை மந்திரி வாக்குப்போல் பயன் தரும் என்பதாம்.

மானிடவாழ்க்கைக்கு முக்கியமான வழிமுறைகளைத் தீட்டித் தந்த பெரியோர்கள் தெய்விக சக்திக்குக் கட்டுப்பட்டு, நல்லதொரு தத்துவார்த்த

(24-ம் பக்கம் பார்க்க)

# வார விரதங்கள்

(சென்ற இதழ் தொடர்)

'கோப்பாய் – சிவம்'

### செவ்வாய்க்கிழமை ஆடிச்செவ்வாய்

மங்கலவாரம் என்ற செவ்வாய்க்கிழமை விரதம் வைரவருக்கும் வீரபத்திரருக்கும் உரியது. இவ்விரண்டும் முறையே வைரவ விரதம், வீரபத்திர விரதம் ஆகிய பகுதிகளில் எடுத்துரைக்கப்படுவது பொருத்தமாகும்.

முருகப் பெருமானுக்கும், அம்பிகைக்கும் உரியதாகவும் செவ்வாய்க்கிழமை கருதப்படுகிறது. முக்கியமாக ஆடிச்செவ்வாய் நாட்களில் அம்பாளை நினைத்து விரதமிருப்பதும் அம்மன் கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்வதும் இன்று பெருவழக்காக உண்டு.

செவ்வாய் மங்கள காரகன். இதனால் திருமணம் கைகூடுவதற்காக செவ்வாய்க்கிழமைகளில் விதரமிருந்து அம்பாளையும் முருகப் பெருமானையும் வழிபடுவர். முக்கியமாகப் பெண்கள் இவ் விரதத்தைக் கைக்கொள்வர். தொடர்ச்சியாக ஏழு செவ்வாய்க்கிழமைகள் அம்பிகையைத் தரிசிக்கச் செல்லுதலும் இவ்விரத வழிபாட்டில் ஓரம்சமாகும். (ஜாதகத்தில் ஏழாமிடம் மண வாழ்க்கையைக் குறிப்பது). ஆடிமாதம் முதற் செவ்வாயில் ஆரம்பித்து வாரந்தோறும் விரதமிருப்பது முறை. "ஆடிச் செவ்வாய் தேடிப்பிடி" என்ற பழமொழி குறிப்பிடத்தக்கது.

### வியாழக்கிழமை விரதம்

வியாழபகவான் புத்திரகாரகன். இதனால் புத்திரப் பேற்றினை விரும்புவோர் வியாழக்கிழமை தோறும் விரதமிருப்பர். இத்தினத்தில் விநாயக வழிபாடு பொருத்தமானது. ஒரு குறித்த வியாழக்கிழமை சங்கல்ப பூர்வமாக இவ்விரதத்தை ஆரம்பித்து ஒவ்வொரு வாரமும் ஒரு நேர உணவுடன் முறைப்படி விரதமிருந்து விநாயக வழிபாடு செய்துவரல் வேண்டும். ஒரு வருட முடிவில் ஆலயம் சென்று விசேஷ அபிஷேக ஆராதனைகளோ சஹஸ்ர நாமார்ச்சனை முதலியனவற்றையோ செய்து விரதோத்யாபனம் செய்ய வேண்டும்.

### வெள்ளிக்கிழமை - ஐப்பசி வெள்ளி

சுக்கிர வாரவிரதம் என்னும் வெள்ளிக்கிழமை விரதம் தனித்தனியே அம்பிகை, விநாயகர், முருகன் ஆகிய மூவருக்குமுரிய விரதங்களாக வெவ்வேறு காலங்களில் ஆரம்பித்து அநுஷ்டிப்பன வாகக் கூறப்படுகின்றன. இவை அந்தந்தப் பிரிவில் விரிவாக ஆராயப்பட வேண்டியவை.

பொதுவாக, வெள்ளிக்கிழமையை ஒரு புனிதமான தினமாக-வழிபாட்டு நாளாக - இந்துக்கள் அனைவரும் கொள்கின்றனர். இந்நாளில் மச்ச மாமிச போசனங்களை விலக்கி, வீடுவாசல்களைக் கழுவித் தாமும் நீராடித் தூய்மையுடன் தமது இஷ்ட தெய்வங்களை வழிபட்டு விரதமிருப்பர்.

ஐப்பசி வெள்ளி மிக முக்கியமானதாகும். இந்நாட்களில் எல்லா ஆலயங்களிலும் விசேஷ அபிஷேகம், திருவிழா முதலியன நடைபெறும். பலரும் ஐப்பசி வெள்ளி விரதமிருந்து ஆலய தரிசனம் செய்வர்.

### சனிக்கிழமைவிரதம் - புரட்டாதிச்சனி

நவக்கிரகங்களுள் மற்றொன்றுக்குமில்லாத தனிச்சிறப்பு சனீஸ்வரனுக்குண்டு. ஈஸ்வரன் என்றபேர் சனிக்கு மட்டும்தான் சேர்கிறது. "சனியைப்போல் கொடுப்பாருமில்லை; கெடுப்பாருமில்லை". என்று சொல்வார்கள், ஜாதகத்தில் சனி நல்ல நிலையிலிருந்து, கோசாரத்திலும் நல்ல நிலைக்கு வந்தால் மிகச் சிறப்பான பலன்கள் கிட்டும். எதிர்மறையாயிருந்தால் மிக் மோசமான பலன்களே கிடைக்கும்.

துலாக்கோல்போல் அமைந்து நேர்மையாக அவரவர் பலன்களை வழங்கும் சனீஸ்வரனை அவனது தினமான சனிக்கிழமைகளில் பிரார்த்தித்து வழிபாடுகள் செய்து விரதமிருக்கும் வழக்கம் நீண்டகாலமாக மக்களிடையே உண்டு.

கன்னி மாதத்திலே (புரட்டாதி) கன்னிகா விருக்ஷம் வியாபகமாகிய தினம் புரட்டாதி மாத முதற்சனி. இத்தினத்தில் சூரியபகவானின் இச்

சாசக்தியாகிய உஷாதேவியிடம் சூரியனுக்குப் புத்திரனாக இச்சையின் வடிவமான சனீஸ்வரன் தோன்றினான் என்பது புராண வரலாறு. இத னால் புரட்டாதிச் சனிக்கிழமை சனி வழிபாட் டிற்கு விசேஷமானதாகும்.

ஒவ்வொரு சனிக்கிழமையிலும் விரதமிருக்க முடியாதவர்கள் புரட்டாதிச்சனி நாட்களில் விசேஷமாக விரதம் அநுஷ்டிப்பர். சனிக்கு அதி பதி விஷ்ணு ஆகையால் விஷ்ணு ஆலயங்களில் விசேஷ வழிபாடுகளில் ஈடுபடுவோர் பலர். சனிக் கிழமை தோறும் விஷ்ணு சஹஸ்ரநாம ஸ்தோத் திரம் பாராயணம் செய்வது மிகவும் நன்று.

சனீஸ்வரன் ஒரு சிறந்த சிவபக்தன் என்ப தனால் சிவாலயங்களிலும் சனீஸ்வர வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. எந்த ஆலயத்திலாவது நவக் கிரகங்கள் இருந்தால் அல்லது சனீஸ்வரன் தனி யாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தால் அங்கு சென்று சனீஸ்வரனுக்கு விசேஷமாக அர்ச்சனை செய்து வழிபடலாம்.

சனீஸ்வரனுக்குரிய தானியம் எள்ளு. வர்ணம் கறுப்பு, வாகனம் காகம். எனவே கரியபட்டினை அவனுக்குச் சாத்துதலும், எள்ளுச் சாதம் நிவே தனம் செய்தலும், காகத்துக்கு உணவு விடுதலும் சனிக்கிழமைகளில் செய்யவேண்டிய காரியங்களா கும். உணவிலே நல்லெண்ணெய், மற்றும் எள் சேர்ந்த பதார்த்தங்கள் சேர்த்தல் நன்று.

இத்தினத்திலே எள்ளு, கறுப்புத்துணி, நல் லெண்ணெய் முதலியவற்றைத் தானம் செய்வ தால் சனி தோஷத்தை நீக்கலாம், செப்புப் பாத்திரத்தில் நல்லெண்ணெய் விட்டுத் தமது முகத்தை அதில் பார்த்துவிட்டு அதனைத் தானம் செய்யவேண்டும்.

ஏனைய விரதங்களுக்கு எண்ணெய் முழுக்கு விலக்கப்பட்ட ஒன்று. ஆனால் சனிவார விரதத் துக்கு எண்ணெய் தேய்த்து நீராட வேண்டும். "சனி நீராடு'' என்பது ஔவைமொழி.

கறுப்புத் துணியிலே எள்ளுப்பொட்டலம் கட்டி அதனைச் சிறிய மண்சட்டியில் (சிட்டி) வைத்து நல்லெண்ணெய் விட்டு அதனைத் தீப மாக ஏற்றிச் சனி தோஷங்களுக்குப் பிரீதி செய் யலாம். இது முழுமையாக எரிந்து நன்றாக நீறு கும் படி நிறைய நல்லெண்ணெய் விடவேண் டும். அரைகுறையாக எரிந்து பொருமுவது கூடாது.

## விரத நியமங்கள்

பொதுவான விரத நியமங்கள் யாவும் இந்த வார விரதங்களுக்கும் உரியனவே என்பதனால் அவை இங்கு விரித்துரைக்கப்படவில்லை. விரத நாளுக்கு முதல் நாளும் மறுநாளும் தாவர போசன மருந்துதல், விரத நாளில் அதிகாலையி லேயே எழுந்து வீடுவாசல்களைக் கழுவித் தாமும் நீராடித் தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து ஆசாரத்துடன் ஆலயம் சென்று வழிபடுவதுடன் வீட்டிலும் காலைமாலை விளக்கேற்றித் தூபமிட் டுத் திருமுறை தோத்திரங்கள் பாடி வணங்குதல் என்பன விரத அநுஷ்டானங்களுக்குரிய உபாங் கங்களாம்.

மதியம் ஒருவேளை உணவருந்துதல் சாதா ரண விரதங்கள் யாவற்றுக்கும் சொல்லப்பட் டவை. இரவில் பால்பழமாவது பலகாரமாவது உண்ணலாம். சக்தியுள்ளவர்கள் உபவாசமாக இருத்தல் சிறப்பு. வசதியிருந்தால் அந்தந்த விரத நாளுக்குரிய தெய்வ மூர்த்தங்களுக்கான பூஜை களையோ அன்றிச் சிவபூசையினையோ தகுதியான அந்தணர்களைக் கொண்டு வீட்டிலே செய்வித்த லும் தானங்கள் செய்வதும், மாஹேஸ்வர பூஜை செய்வதும் சிறப்பு.

இனி, திதி விரதங்களையும், நட்சத்திர விர தங்களையும் தொடர்ந்து கவனிப்போம்.

(தொடரும்)


யாழ்நகரில் புதிய அலுவலகம்

**மகாதேவா ஜோதிடம்**

**இ. மகாதேவா**

கந்தோர்: 295/7 கே. கே. எஸ். வீதி யாழ்நகர்.

கிழமைநாட்களில் காலை 10-00 மணி தொடக்கம் பிற்பகல் 2-00 மணி வரையும் சந்திக்கலாம்.

வீடு: 140 செல்லர் வீதி, நல்லூர்-யாழ்நகர்.

ஏனைய நேரங்களிலும் சனி, ஞாயிறு போயா தினங்களிலும் காலை 8-00 — பி. பகல் 6-00 மணி வரையும் சந்திக்கலாம்.

# அதிஷ்ட எண் ஞானம்

— இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் —

(சென்ற இதழ் தொடர்ச்சி)

நக்ஷத்திர ஆண்டு சூரிய ஆண்டு இரண்டிற்கும் வித்தியாசமான கால அளவுகளுண்டு. இவை இரண்டிற்கும் ஒவ்வொரு வருஷமும் 20 நிமிடம் 20 செக்கன் வித்தியாசமாகும்.

நக்ஷத்திர ஆண்டை அடிப்படையாக நக்ஷத்திரத்தின் பலனைப் பார்த்து பலனைச் (சோதிட முறையில்) சொல்பவர்களுக்கும் சூரிய ஆண்டு 365¼ நாள் லீப்பியவருஷம் 366நாள் அடிப்படையாகக்கொண்டு அதிஷ்ட எண்ஞான முறையில் பலனை அறிவதிலும் வித்தியாசமான போக்கு — திகதிகளில் மாற்றங்கள் ஏற்படும். திகதிகள் மாறினால் எண்கள் மாறும் பலன்கள் மாறும் இதையறியாது சிலர் எடுத்த எடுப்பிலேயே நக்ஷத்திரங்களுக்கு எண்கள் அமைத்து அதை திகதிகளுடன் ஒப்பிட முயலுகின்றார்கள். இது தவறாகும்.

அது வழமைக்கு மாறாக மக்கள் ஏற்கக்கூடியதாகவும் இல்லை. பல முரண்பாடுகள் ஐயங்கள் ஏற்படுகின்றன. ஆனால் நாம் இங்கு தெளிவான ஒரு கொள்கையை கடைப்பிடிக்கின்றோம். எமது அனுபவத்தை இங்கு எழுதுகின்றோம்.

சூரிய ஆண்டைக் கருத்திற் கொண்டே அதிர்ஷ்ட எண்ஞானம் வளர்ந்து வருகின்றது.

## தொடர் I

மனித அறிவின் மட்டுப்படுத்தப்பட்ட தன்மையும், அதற்கப்பாற்பட்ட பேரறிவும் எமது கண்களுக்குப் புலனாகக் கூடியவற்றை திருஷ்டம் என்கிறோம். அதிஷ்டம் என்றால் கண்களுக்கு புலப்படாதனவாகும். எண்ஞானம் என்றால் எண்களைப்பற்றிய அறிவு என்று பொருள் ஆகும்.

சூரியனும் அதைச்சுற்றியுள்ள கிரகங்களும் ஒரு ஒழுங்கு முறையில் சுற்றி இயங்கி வருவதை நாமனைவரும் அறிவோம். இக்கிரகங்களின்தொகுதி இன்னொரு பெரிய நக்ஷத்திரக் குடும்பத்திற்கு ஒரு கிரகமாக அமைந்துள்ளதென்பது விஞ்ஞானக் கோட்பாடானது ஆகும். இப் பூவுலகத்தின் ஒரு சிறிய அணுவினுள்ளும் நடுவில் நியூட்டோனும் புரோட்டினும் சுற்றிவர இலக்ரோன்களும் அதே ஒழுங்கு முறையில் தான் இயங்குகின்றன. எனவே அணு சூரியக்குடும்பம் நக்ஷத்திரக் குடும்பம் என்பன அமைப்பிலும் இயக்கத்திலும் ஒரு ஒற்றுமைத் தன்மை அதாவது மீளமைவுத் தன்மையைக் கொண்டு இருக்கின்றன. இப்பிரபஞ்ச அமைப்பில் உள்ள மீளமைவுபோல ஓடிக்கொண்டிருக்கும் கோடானகோடி கால வெள்ளத்திலேயும் ஒரு மீளமைவுத் தன்மை இருக்கின்றது. இந்தக் காலவெள்ளத்தின் மீளமைவின் நுட்பம் ஒரு குறிப்பீட்ட இடைவெளிக் காலத்தில் திரும்பத் திரும்பச் செயற்படுகின்றதை அவதானிக்கலாம். உதாரணமாக அமெரிக்க பிரபல்ய ஜனாதிபதிகளான ஆபிரகாம்லிங்கன் பிறந்தது 1808–ம் ஆண்டு. ஜோன் எவ். கென்னடி பிறந்தது 1908 ஆம் ஆண்டு. ஆபிரகாம்லிங்கன் ஜனாதிபதியானது 1860-ம் ஆண்டு. கென்னடி ஜனாதிபதியானது 1660 ஆம் ஆண்டாகும். லிங்கனின் செயலாளர்பெயர் கென்னடி, ஜனாதிபதி கென்னடியின் செயலாளர் பெயர் லிங்கன். இரு ஜனாதிபதிகளும் தம்து மனைவி முன்னிலைகளில் சுட்டுக்கொல்லப்பட்டவர்கள். அமெரிக்காவின் சரித்திர இடைவெளியான 100 ஆண்டு காலத்தில் காலத்தின் மீளமைவுத் தன்மை எவ்வளவு சரியாக நடந்துள்ளது. இதே போன்று பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பூட்டோவின் மரணம் போல் 80 வருஷங்களுக்கு முன்பு அதே நாட்டில் நடந்தது. பிரிட்டனில் 500 வருஷ இடைவெளியில் தற்போதைய இளவரசர் சாள்ஸ் போன்ற உருவத்தில் ஒரு சாள்ஸ் இருந்துள்ளதிற்கு ஆதாரபூர்வமான சான்றுகள் உண்டு. இவ்வாறு பல உதாரணங்களைச் சொல்லலாம்.

இப்பூமி ஐம்பூதங்களிலானது: ஒரு மனித உடலிலும் அவ்வாறே. இப்பரந்த உலகப்பொருட்களில் காணப்படும் பிரபஞ்சச் சேர்வு விகிதம் மனித உடலிலும் இருக்கின்றது.

பூமியில் ¾ பங்கு நீர் என்றால் மனித உடலிலும் ¾ பங்குதான் நீர். பூமியில் 9வீதம் உப்பு என்றால் மனிதஉடலிலும் 9வீதம் உப்பேயாகும். இவ்வாறு இப்பிரபஞ்சத்தில் மீளமையும் தன்மைகள் 9 ஆகவுள்ளது; நவக்கிரகங்கள், நவரத்தினங்கள், நவதானியங்கள், நவசக்திகள், நவபாஷாணங்கள், நவசெல்வங்கள், நவநாயகங்கள், நவவாயில்கள் ஒன்பது, ஒன்பது அம்ஷங்களாக அமைந்துள்ளதுபோல் மனித உடலிலும் ஒன்பது அம்சங்கள் பிரதானமாக அமைந்துள்ளன. சிரசு, முகம், மார்பு, பின்முதுகு, வயிறு, அரை, தொடை, பாதம், கைகால்கள் என்று ஒன்பது வெளியுறுப்புக்களும், எலும்பு, இரத்தம், மூளை, நரம்பு, சுக்கிலம், தசை, குடல், தோல், எலும்பினுள் மூளை என்று உள் ஒன்பது உடற்கூறுகளும், உயிர், மனம், அறிவு, ஆசை, புத்தி, இன்பம், காமம், முதிர்வு, விடுதலை, ஒடுக்கம் என்று ஒன்பது அகப்பொருட்களும் அமைந்துள்ளன.

இங்கு ஒன்பது, ஒன்பது ஆகக் குறிக்கப்பட்டவை வெறுமனே ஒன்பது அம்சங்கள் கொண்ட தொகுதி என்று அர்த்தங்கொள்ளக்கூடாது. ஒரு தொகுதியின் ஒரு அம்சம் முறையே ஒவ்வொரு தொகுதியின் அதே அம்சத்தோடு ஒப்புநோக்கற்பாலது. உதாரணமாக நவக்கிரகங்களில் சூரியன் என்ன தன்மை இயக்கத்தை உடையதோ, அதே தன்மை இயக்கத்தையே நவரத்தினங்களில் மாணிக்கத்திலும், மனித உடலின் வெளியுறுப்புக்களிலும், சிரசு உடற்கூறுகளில் எலும்பு, அகப்பொருட்களில் உயிர் என்பன முறையே கொண்டுள்ளது. இதிலிருந்து நாம் அறிவது என்னவென்றால் நவக்கிரகங்களில் ஒவ்வொன்றையும் அறிவதன் மூலம் மனிதனின் வெளித்தோற்றம், உடற்கூறுகள் அகப்பொருட்கள் ஆகியவற்றை அறிய முடியும்.

வெவ்வேறு, உயிர்களிடத்தில் இருக்கும் அறிவு வேறு வேறுதரமானவை. உதாரணமாக: ஒருகல் ஒருநாய், ஒருமனிதன் என்பவற்றை எடுத்துக் கொண்டால் பிராணியான நாய், கல்லுக்கும் மனிதனுக்கும் வேற்றுமை காணமுடியும். ஆனால் மனிதன் தன் பகுத்தறிவால் பல காரியங்களைச் செய்கின்றான் என நாய் உணர முடியாது. அப்படிக் கருதும் அறிவு ஆற்றல் நாய்க்கு இல்லை.

அப்படியே மனிதனின் ஆற்றலைவிட மேம்பட்ட அறிவு ஆற்றல் உள்ளவை உலகில் உண்டு. ஆனால் அவற்றை மனிதனால் உணரமுடியாது. வானவெளியில் தத்தம் செயற்பாடுகளில் தவறாமல் ஒழுங்கு முறையில் இயங்கிவரும் கிரகங்கள் நக்ஷத்திரங்கள் என்பவற்றை சடப்பொருள் அடிப்படையில் ஆராய மனிதசக்திக்கு முடியும், ஆனால் அக்கிரகங்களின் நுண்ணுயிர்த் தன்மை பற்றியும் அறிவின் தரம் பற்றியும் அறிய சாதாரண மனித சக்திக்கு சக்தி இல்லை.

பூமியெங்கும் நிறைந்திருக்கும் நுண்ணிய ஒலியலைகளை வானொலியில் குறிப்பிட்ட மீற்றரில் கேட்கமுடியும்; வானொலிக்கருவி இல்லாமல் மனிதப்புலன்களால் ஒளியலைகளைப் பகுத்துணர முடியாது. ஆனால் ரெலிவிசன் பெட்டியால் முடியும். எம்மால் பகுத்து, பிரித்து, ஒலி, ஒளி சக்திகளை அறிய முடியவில்லை என்பதற்காக அந்த ஒலி, ஒளி மின் காந்தச் சக்தி உலகில் இல்லையென்று நாம் கூறிவிட முடியுமா? மேலும் வானொலிப் பெட்டியோ தொலைக்காட்சிப் பெட்டியோ தமது சக்தியால் தான் தாம் இயங்குகின்றோம் என நினைத்தால் எவ்வளவு தவறோ அதே போன்று தான் நம்மால் எல்லாம் நடக்கின்றது என மனிதர்கள் எண்ணுவதுமாகும். வானொலி நிலையத்தில் ஒரு சிறு தவறு நடந்தால் அத்தனை வானொலிகளும் பாதிக்கப்படுகின்றதல்லவா? வானொலியும், ரெலிவிசனும் அந்தந்த நிலையங்களிலிருந்து இயக்கப்படுவது போன்றே வெவ்வேறு கிரகங்களிலிருந்து வரும் நுண்ணிய சக்தியலைகளால் தான் பூமியிலுள்ள பொருள், உயிரினங்கள் எல்லாம் இயக்கப்படுகின்றன. (தொடரும்)


## விநாயகர் சகஸ்ரநாமம்

விநாயகர் சகஸ்ரநாம அர்ச்சனைப் புத்தகம் எம்மிடம் விற்பனைக்குண்டு. கிரந்த எழுத்தில் தெளிவாக அச்சிடப்பட்டுள்ளது.

விலை ரூபா: 5·00

விபரங்கட்கு:

சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக் குருக்கள்
அரசகேசரிப் பிள்ளையார் கோவில்,
நீர்வேலி.

# ஆய்வுமன்றம்

கே. சங்கரன் ரமேஸ் கொழும்பு-11

உங்கள் கிரகநிலைப்படி 9-ல் செவ்வாய் இருந்து சனியால் பார்க்கப்படுவதால் தகப்பனுக்கு அலைச்சல், பிரயாசை, நிம்மதியின்மை என்பன ஏற்படலாம்.

அ. லோகேஸ்வரன், தொண்டமானாறு.

தங்கள் ஜாதகத்தில் 10-ம் வீடு சரராசியாக அமைவதால் எந்தத் தொழிலும் நிரந்தரமாக அமைவது கஷ்டமாகத்தான் இருக்கும். அத்துடன் 10-ல் குரு நீசம் பெற்றிருப்பதும், 10-ம் வீடு இருபக்கமும் பாபக்கிரகங்களால் சூழப்பட்டு ''பாபகர்த்தரி யோகம்'' பெறுவதால் நிரந்தரமாக எத்தொழிலும் செய்யமாட்டீர்கள்; பலதொழில்களும் மாறிமாறி அமையும்.

யோ. யோச. யோகராசா, பிரவுண்வீதி, யாழ்ப்பாணம்

உங்களுக்கு தற்போது சுக்கிரதசையில் சூரிய புத்தி நடக்கின்றது. கோசரப்படி குரு 11-ல் சஞ்சரிக்கின்றது. எனவே இக்காலம் உங்களுக்கு பல விதத்திலும் முன்னேற்றத்துக்கு ஏதுவாகவே இருக்கின்றது. ஜூன் 18-ந் திகதி குரு 12-ம் இடத்துக்கு மாற்றமடைவதால் நற்பலன்கள் குன்றக் கூடும். வியாழக்கிழமை விரதமனுஷ்டித்து தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வரவும்.

ச. தயாநிதி, காத்தான்குடி.

உங்களுக்கு 1988-6-9 வரை கேது தசையில் ராகுபுத்தி நடக்கின்றது. 2-ம் வீட்டைச் சனி பார்ப்பதால் 30 வயதுக்கு முன் திருமணம் நடக்க சாத்தியமில்லை. 1989இல் நடக்கக்கூடிய சாத்தியக்கூறு உண்டு. 7-ம் வீடு செவ்வாயின் வீடாக அமைவதால் வயதுக்கு மூத்த களத்திரம் அமையலாம். அடுத்து 7-ம் அதிபதி சூரியனுடன் சேர்வதால் தந்தைவழிச் சம்பந்தம் கைகூடலாகும். 5-ம், 7-ம் அதிபதிகள் சேர்ந்திருப்பதால் காதல் வழிக் கல்யாணம் அமையலாம்.

சு. இராஜகுமார், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தங்கள் விண்ணப்பத்தில் நட்சத்திரம் குறிக்கப்படவில்லை. மகாதசை இருப்பு சரிவரக் குறிக்கப்படவில்லை. எனவே உங்கள் கேள்விக்கு எப்படி பதில் தருவது?

வை. விஜயராசா, தொண்டமானாறு.

உங்கள் ஜாதகப்படி 6-ம் வீடு பாபர் மத்தியம் பெறுவதால் நோய் இல்லாமல் இருக்க மாட்டீர்கள். மேலும் 1990 மார்ச் வரை ஏழரைச்சனி கடைக்கூறு நடக்கின்றது. ஆகவே சனிக்கு வழிபாடு மேற்கொண்டு வரவும். அத்துடன் 1990-7-21 வரை புதன் திசையில் ராகுபுத்தி நிகழ்கின்றது. ராகு தொய்வு வருத்தத்தை நிறுத்த உதவி புரியாது. ராகுவுக்கு அம்பாள் வழிபாடு மேற்கொண்டுவரவும்.

வி. பொன்னம்பலம், காங்கேசன்துறை.

உங்களுக்கு 1989-2-2 வரை சுக்கிர தசையில் சனிபுத்தி நடக்கின்றது. சனி 9-ம் வீட்டில் இருப்பதனால் வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிட்டும். சுக்கிரன் 10-ல் இருப்பதால் தொழில் சம்பந்தப்பட்ட பிரயாணமாக இருக்கும்.

எம். அல்போன்ஸ் ஸ்ரீ ஜெயன், கொழும்பு-13

உங்கள் ஜாதகத்தில் சந்திரன் லக்கினாதிபதியாகி லக்கினத்தில் ஆட்சி பெற்றிருப்பதாலும் குருவுக்குக் கேந்திரத்தில் இருந்து கேசரியோகம் பெறுவதாலும், சந்திரன் நன்மையான பலனுக்குரியவர் ஆகின்றார். சந்திரதசை புத்திக்காலங்கள் சிறப்பைத்தரும்.

வ. கிருபாகரன், ''குககிருபை'' மானிப்பாய்

உங்களது ஜாதக விபரங்களின்படி தற்போது சுக்கிரன் மகாதசை நடைபெறுகின்றது. இதில் 1988-5-10 முதல் 1989-5-10 வரை சூரியன் புத்தி நிகழும். குடும்பஸ்தானத்தை செவ்வாய், சனி என்பன திருஷ்டிப்பதால் திருமண விடயத்தில் காலதாமதம் ஏற்படலாம். எனினும் 1989 மே மாதத்துக்குள் வடக்குத் திசையில் சொந்த மற்ற இடத்தில், படித்த பெண் மணமகளாக அமைவாள். சனிவழிபாடு மேற்கொண்டுவரவும்.

வி. ஞானசக்தி, கல்வயல், சாவகச்சேரி.

2-ம் அதிபதி குரு 4-ல் இருப்பதால் கல்வியில் முன்னேற்றமுண்டு. விஞ்ஞானத்துறைக் கல்வி சித்தியளிக்கும்.

சி. கந்தசாமி, மட்டுவில் வடக்கு.

உங்கள் அந்தியகால முடிவை தனியொரு கிரகநிலையை மட்டும் கொண்டு ஆராயமுடியாது. அதற்கெனத் தனியான கணிதம் உண்டு. தரமான சோதிடரிடம் சென்று ஆலோசனை பெறவும்.

வி. பத்மநாதன், கொட்டாஞ்சேனை.

தங்கள் பெயரை எண் 5 வரத்[illegible]தாக மாற்றவும். *V. Pathmanaathan* என எழுதிவரல் நன்று.

மனிதரில் ......... (18-ம் பக்கத் தொடர்)

வழிவகைகளைப் பின்பற்றி நடக்கவேண்டும் என்ற நியமங்களை நிர்ணயித்துள்ளார்கள். அவைகளிலிருந்து பல பிரிவுகளாகத் தொகுக்கப்பட்டு வைதிகம், பௌதிகம், மந்திரம், தந்திரம், வைத்தியம், ஜோதிஷம் என்று சொல்லப்படும் பலவகைப்பட்ட தொகுதிகளாக மாற்றி, அதனதற்குள்ள குண பேத நலன்களும் சாயல்களும் செய்முறைகளும் நமக்கேற்ற முறையில் பயன்படுத்தி வாழ்க்கை நடாத்த எழுதி வைத்தனர் போலும்.

எனவே கல்வியோடு கல்வியாக, இன்பம் கூட்டும் கலையோடு கலையாகச் சோதிடத்தைப் பல வழியில் ஜோதிடர்கள் ஆய்வதற்குப் பரவலான வசதிகளை அரசு செய்தே செல்வாக்குடன் இந்தக் கலை மலர்ந்து ஜெகம் முழுதும் மணம் பரப்பச் செய்தல் ஒரு கடமையாகச் செய்ய வேண்டும். செல்வாக்கு உள்ளவர்கள் ஜோதிடத்தில் கீர்த்தியுறு வல்லுனர்கள் ஒன்று கூடி எல்லார்க்கும் சுபம் ஈயும் யோகநாளில் எந்தப் பெரும் நற்செயலதையும் அரசு செய்ய நல்வாக்குப் பல கண்டு எடுத்துக்காட்டி குறும்பர்கள் கொட்டத்தை அடக்க வேண்டும். இல்லையேல் பொது வாழ்வில் அவந்தரையே பெருகிவிடும் எனச்சொல்லத்தோன்றுகிறது; வாழ்க ஜோதிடக்கலை!

---

அடுத்த இதழில்..............

## 19-5-88 இல் ஏற்படும் வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

**வாசிக்கத் தவறாதீர்கள்!**

---

# துலா லக்னப் பெண்ணும் சிங்க லக்ன ஆணும் சேர்வது நன்மையானதா?

வே. சின்னத்துரை - நல்லூர்

இருவரும் மிகவும் உற்சாகமானவர்களானாலும் இவர்களின் குணங்கள் ஒன்றுக்கொன்று முரணானதாகும். நல்ல விவாதத்தில் நம்பிக்கையும் அப்படிச் செய்வதில் சிங்கப் பெண் மிக விருப்புடையவளுமாவாள். இப்படிச் செய்வதால் எல்லாச் சிக்கலும் தீர்ந்து மனஸ்தாபங்கள் நீங்கி விடும் என்பது அவள் கருத்து. ஆனால் துலாக்காரரோ எல்லாவற்றிலும் நிதானத்துக் காகவே சீவிப்பவர். விபரீதப் பேச்சுக்கள் அமைதிக்கு மாறானதும் நிதானமற்றதென்பதும் அவர் கருத்து. முரண்பாடுகளைப் பற்றி சந்தடியில்லாது தெளிவாக பேசுவதில் அவர் தீ போன்ற சிங்கக்காரியுடைய எதிர்ப்புக்கு ஆளாவார். இந்த வித்தியாசத்திற்கு அவர்கள் ஒரு தீர்வைக் கண்டாலொழிய சீவியம் கஷ்டமானதாகவேயிருக்கும். ஒரு தீர்வெடுப்பதில் எதிர்ப்புத் தன்மையை கிளறிவிடும். அத்தியாவசியமென்றால்தான் அவன் இதற்கு முகம் கொடுப்பான். ஆனால் அவன் இவரை பொறுப்பில்லாதவர், கவலையீனமானவர் என்று கவல்வாள்.

துலா லக்கின காரரை அழகு வலிந்திழுக்கும். ஒரு அழகான பெண் அங்கிருந்தால் சிங்கக்காரி இதை மிகவும் கவனமாக நோட்டமிடுவாள். அவன் தன் சுபாவத்திற்கேற்ப அப் பெண்ணை மயக்கி எப்படியென்றாலும் தன்வசமாக்குவான். சிங்கக்காரிக்கும் துலாக்காரருக்குமிடையில் வயது வித்தியாசம் பாரதூரமாகவிருப்பின் மேற்கூறியவை முழு உண்மையாகும். தனது இளமையைத்தான் இழக்கிறார் என்று அவர் கவலையடைவார். ஆகையால் தனது கவர்ச்சியை அவர் உண்டாக்கிக் கொள்வார்.

இரண்டு பேரும் பிழையாகவே வேலை செய்வார்கள். இருவரும் கடும் உழைப்பாளிகள். கூடின காலவளவிற்கு அவர்கள் செயலற்றிருக்கவும் இயலும். இப்படி இருந்தும், இக்குணநிசயம் இருவருக்கு மிருக்கிறதென்பதை அவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். நீ சோம்பேறி. இல்லை நீதான் சோம்பேறி என்று ஒருவரை ஒருவர் திட்டிக்கொள்வார்கள்.

பாலியல்பாக, அவர்களுடைய தாகம் சமனானதே. ஆனால் வித்தியாசமானது. அவனுக்கு வசீகரமும், கற்பனையும் தேவை. அவளிடம் அவன் அதை எதிர் பார்ப்பான். ஆனால் இவையற்று அவளுடைய நோக்கு தாராளமானதும் நேரிடையானதுமாகும். கற்பனையில் ஊக்குவிப்பு வருமென்பதை அவள் விளங்கமாட்டாள். இதை அவன் உணர்ந்தால், அவனுடைய கண்கள் வேறு இடங்களில் திருப்தியை நாடும்,

இந்த உறவை எப்படியெனினும் தவிர்க்க வேண்டியதே.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.





மாணவ மணிகளே!

திருக்குறளைத் தினமும் படியுங்கள்

சம்பூரண சலவைக்கு நுரைவளம் கூடிய

மில்க்வைற் நீலசோப்பை

வாங்கி உபயோகியுங்கள்

ஒரு கட்டி விலை ரூபா 3/- மட்டுமே!

500 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளில் உள்ள திருக்குறளை வெட்டி அனுப்பி உறையுடன் கூடிய "திருக்குறள்" புத்தகம் ஒன்றை பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233


## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்.

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமல் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பதே எமது அவா. எத்தனையோ கஷ்டங்கள் ஏற்படினும் மலரை வாடவிடாமல் பாதுகாக்க வேண்டியது வாசகர்களாகிய உங்கள் கடமையன்றோ; இதுவரை புதிய மலருக்கான சந்தாவைச் செலுத்தாதவர்கள் உடன் சந்தாவைச் செலுத்திப் பதிவு செய்வித்துக் கொள்வதோடு புதியசந்தாகாரர்களையும் சேர்த்து ஊக்கமளிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| சந்தா விபரம்: இலங்கைக்கு மாத்திரம் | | வருட சந்தா | ரூ 54-00 |
| வெளிநாட்டுக்கு | (கப்பல் வழி) | வருட சந்தா | ,, 90-00 |
| மலேசியா | (விமான வழி) | வருட சந்தா | ,, 192-00 |
| இங்கிலாந்து | (விமானவழி) | வருட சந்தா | ,, 237-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 4.50 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

கா[illegible], காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280